Registered as a News paper   பக்கங்கள் 10   விலை 07/=




# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு   மக்கள் நாளிதழ்

Eezhanatham

நாதம் 01   திருவள்ளுவர் ஆண்டு 2035   தை 19   01.02.2005 செவ்வாய்க்கிழமை   ஓசை 236

# திருக்கோவில் பிரதேச செயலக கூட்டத்தில் ஜே.வி.பி. எம்.பி. நேற்று அத்துமீறி நுழைவு

## விடுதலைப்புலிகள் ஆட்சேபம் தெரிவித்து வெளியேறினர்

(நமது நிருபர்)

**அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேச ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் குழுக் கூட்டத்தில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ அழையா விருந்தாளியாக கலந்து கொண்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து அக்கூட்டத்தில் கலந்து கொண்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் வெளியேறினர்.**

சிறிலங்கா ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கமைய மேற்படி குழுவில் பிரதேச செயலாளர் வி.கே.தவராஜா தலைமையில் பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப்படை, விடுதலைப்புலிகள் மற்றும் மதப்பிரமுகர் என 6 பேர் அங்கம் வகிக்கின்றனர். இன்று நடைபெறவிருக்கும் அம்பாறை மாவட்ட ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## இந்தக் குழந்தையின் பெற்றோர் யார்?

## நாளை கல்முனை நீதிமன்றில் தீர்ப்பு



**சுனாமியால் சிக்கி பெற்றோர் யார் என்று தெரியாது கடந்த 1 மாதகாலமாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்டு வருகின்ற இந்த மூன்று மாதக் குழந்தைக்கு பலர் உரிமை கோருகின்றனர். இந்த வகையில் குழந்தைக்கு யார் உரிமையானவர் என்ற இறுதித் தீர்ப்பு நாளை கல்முனை நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.**

## கொடுப்பனவில் அரசு புறக்கணிப்பு மட்டு புகையிரதத்தை மறித்து போராட்டம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பில் நேற்று காலை புகையிரத ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான க.தங்கேஸ்வரி மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் எடுத்த முயற்சியினால் கைவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட புகையிரதத்தை செல்ல விடாது தடுத்து இப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 16 வருடங்களாக நிரந்தர நியமனமின்றி கடமை புரிந்து வரும் இவர்கள் கடந்த வருடங்களில் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றிக்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனவும்,

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 2500 ரூபா கொடுப்பனவு தங்களுக்கும் வழங்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவுகின்ற புகையிரத வெற்றிடங்களுக்கு இவ் ஊழியர்களைக் கொண்டே நிரப்பப்பட வேண்டும், வெளியிலிருந்து எவரையும் இவ்வெற்றிடத்திற்கு நிரப்பக் கூடாது என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலைமையை அறிந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## ஜே.வி.பி உறுப்பினர் நடவடிக்கைக்கு பத்மநாதன் எம்.பி கண்டனம்

(நமது நிருபர்)

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ அத்துமீறி நுழைந்தமை கண்டிக்கத்தக்க விடயம்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற நிலையில் எமது பிரதேசத்துக்குள் இவ்வாறு அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட சம்பவம் குறித்தும் கவலை தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த நிவாரணப் பணி என்ற போர்வையில் நுழைந்த இவ்வாறான சக்திகள் கிழக்கை துண்டாட வேண்டும் என்ற பிரசாரங்களையும் மக்களிடையே பிரசாரப்படுத்தி வருவதாக அவர் கவலை தெரிவித்தார்.

## முஸ்லிம் அமைச்சர்கள் ஒன்றிணைய வேண்டும்

(மருதமுனை பி.எம்.எம்.ஏ.காதர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அழிந்து போயுள்ள கிழக்கு மாகாணத்தை மீள கட்டியெழுப்ப, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறு வாழ்வழிக்க அனைத்து முஸ்லிம் அமைச்சர்கள், எம்.பிக்கள் ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டும். என அமைச்சர் பேரியல் அஷ்ரப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே இந்த வேண்டுகோளை இவர் தெரிவித்தார்.

அரசியல் பேதங்களையும், கட்சி வேறுபாடுகளையும் ஒருபுறம்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## கல்முனை பஸ் பணியாளர்களுக்கு விடுதலைப்புலிகளால் நிவாரணம்

(துஷி)

அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாக சேவை பிரிவினரால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கல்முனை நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி சாலையில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

நேற்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வு கல்முனை பிரதேச நிாவாகப் பொறுப்பாளர் தேவா தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட நிர்வாகத்துறை துணைப் பொறுப்பாளர் புவிராஜ், மட்டு. அம் பாறை மகளிர் அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சசிமதி உட் பட நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி முக்கியஸ்தர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இன்றைய நாளில்

**லெப்.கேணல் சுபேசன்**

**மருசலீன் அல்வின்**

**02.07.1971-01.02.1998**



**சிறிலங்காவின் சுதந்திரதினப் பொன் விழாக் கொண்டாட்டத்திற்கு கிளிநொச்சியூடாக யாழ். மக்களை கொண்டு செல்வோம் என்ற இறுமாப்புமிக்க சிங்கள அரசத் தரப்பின் நிலைப்பாட்டுக்கு 02.02. 98அன்று விடுதலைப்புலிகள் கொடுத்த பலமான அடி கிளிநொச்சி நகர் மீட்பாகும். கிளிநொச்சி நகரின் மையத்தில் சிங்களக் கொடி பறப்தை மாற்றி தமிழீழக் கொடியை பறக்கச் செய்த தாக்குதலுக்கு பலம் சேர்த்த கரும்புலி லெப். கேணல் சுபேசன் வீரச்சாவடைந்தார்.**

## களுதாவளை கடலோரத்தில் ஆயிரக்கணக்கான தேங்காய்கள் மிதப்பு

(அ.நிஷாத்)

சுனாமி பேரலைத் தாக்கம் ஏற்பட்டு ஒரு மாதகாலம் கடந்த நிலையிலும் கூட அலையினால் அள்ளுண்டு செல்லப்பட்ட பொருட்கள் கரையொதுங்கிக் கொண்டிருக்கின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் களுதாவளை, தேற்றாத்தீவு, செட்டிபாளையம், புதுக் குடியிருப்பு உள்ளிட்ட கரையோரப் பிரதே சங்களில் பல பொருட்கள் திடீரென அலையினூடாக கரையொதுங்கப்பட்டன.

அதாவது பெருமளவிலான தேங்காய்கள், விலை மதிப்புள்ள பெரிய மரங்களே அதிகமாக கரையொதுங்கின. இவற்றை பிரதேச மக்கள் உழவு இயந்திரங்களிலும், கனரக வாகனங்க ளிலும் ஏற்றிச் சென்று தங்களது பாவனைக்கும் மேலதிகமானவற்றை மொத்தமாக விற்பனையும் செய்தனர்.

இதேவேளையில் இதனை அறிந்து கடலோரங்களில் பெருமளவிலான மக்கள் பொருட்களை தேடுவதிலும் ஈடுபட்டனர்.

## முறைப்பாடு செய்ய சென்ற நபர் மீது காத்தான்குடி பொலிசார் தாக்குதல்!

(காத்தான்குடி நிருபர்)

புதிய காத்தான்குடி அற்றார் அகதி முகாம் தலைவர் கே.எல்.அகமட் சிறாஜ் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்வதற்காக காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போது அவரது முறைப்பாட்டை பதிவு செய்ய மறுத்த பொலிசார் நான்கு மணிநேரம் அவரை தடுத்து வைத்ததாகவும், அவரை தாக்கியதாகவும் இது பற்றி பூரண விசாரணை நடாத்த வேண்டுமெனவும் அகதி முகாம் நிர்வாகிகளும் அங்கு தங்கியுள்ள குடும்பத் தலைவர்களும் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக நலன்புரி நிலையப் பொறுப்பாளர் எம். ஐ.எம்.றஹ்மதுல்லாஹ் தெரிவித்தார்.

மார்க்க விரோத பொருட்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# செய்தித் துளிகள்

## படிவம் வழங்கல்

(அ.தர்மா)

அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சேனைக்குடியிருப்பு விவசாய விரிவாக்கல் பயிற்சி நிலையப் பிரிவிலுள்ள மேட்டு வட்டை விவசாயிகள் கடந்த 26.12.2004 ந் திகதி ஏற்பட்டுள்ள சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரண விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டு வருவதாக மேற்படி நிலையத்தின் விவசாயப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## விசேட இளைஞர் படை

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய சேவை மன்ற கிழக்குமாகாணப் பணிப்பாளரின் அனத்தத்தின் முகாமைத்துவ விசேட இளைஞர் படை அணியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப்படையணி பிரதேச மாவட்ட ரீதியாக ஐந்து குழுக்களாக செயற்படவுள்ளது. உள ஆற்றுப்படுத்தல், சுகாதாரம், பாடசாலை மாணவர்கள் சிறுவர்கள் தொடர்பானவையினை செயற்படுத்துதல், தரவுகளை சேகரித்தலும் மோசடிகளை தவிர்த்தல், எதிர்கால அபிவிருத்தி, சிரமதானம் மேற்கொள்ளல் போன்ற விடயங்களை கையாள்தல் ஆகியனவாகும்.

இதன் பணிகளை பிரதேச ரீதியாக சகல குழுக்களும் தற்போது ஆரம்பித்து வைத்து தமது கடமைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தகவல் சேகரிப்பு

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் விபரங்களை மீனவர் சமாச கூட்டுறவுச் சங்கம் சேகரித்து வருகின்றது.

இந்த இரு மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மீனவர்களின் விபரங்கள் மற்றும் பாதிக்கப்பட்டு மீன்பிடி உபகரணங்களை இழந்த மீனவர்களின் விபரங்களை கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக மீன்பிடி சமாசக் கூட்டுறவுச் சங்கம் தகவல் திரட்டி வருகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்டு மீன்பிடி உபகரணங்களையும் இழந்த மீனவர்களுக்கு நஷ்ட ஈடுவழங்கப்படும் முகமாகவே தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது என சங்கத்தின் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

## விபரங்கள் சேகரிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் சேதமடைந்த இந்து சமய அமைப்புக்கள் அனைத்தினதும் விபரங்களை இந்து ஆலய ஒன்றியத்தினரால் சேகரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இவ்விரு மாவட்டங்களிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள், இந்து சமய நூலகங்கள், அறநெறிப் பாடசாலைகள், இந்து சமய நிலயங்கள் போன்ற வற்றின் விபரங்களை அதற்குப் பொறுப்பாகவுள்ள நிருவாகிகள் அல்லது அமைப்புக்கள் மாவட்ட இந்து ஆலய ஒன்றியத்தின் தலைவர் செயலாளர்களுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மாசிமக மகோற்சவம்

(நமது நிருபர்)

மாத்தளை முத்துமாரியம்மன் தேவாலய மாசிமக மகோற்சவ திருவிழா நேற்று முற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 25ம் திகதிவரை மகோற்சவம் நடைபெறும் தேவஷ்தான வீதியில் கலாசார நிகழ்வுடன் கொடிஊர்வலம் நடைபெற்று கொடியேற்றம் ஆரம்பமானது. ஊர்வலத்தைத் தொடர்ந்து கொடியேற்ற வைபவம் பகல் 11 மணியளவில் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜையுடன் சுவாமி தேரடிக்கு எழுந்தருள்வார்.

# அரச நிவாரணங்கள் மக்களைச் சென்றடையவில்லை

## ஆராய அரச உயரதிகாரிகள் குழு விஜயம்

(நமது நிருபர்)

**ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கவென அரசாங்கம் வழங்கியுள்ள நிதி மற்றும் நிவாரணங்கள் ஆகியன சில மக்களை சென்றடையவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.**

இது தொடர்பாக ஆராய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் அரசாங்கத்தின் உயரதிகாரிகள் குழுவொன்று நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி திருகோணமலை மாவட்ட நிலைமை குறித்து ஆராய்வதற்காக இந்தக் குழுவினர் அம்மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்தனர்.

குறிப்பாக காலி, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி உதவிகள் உரியமுறையில் சென்றடையவில்லையென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இந்த அனர்த்தத்தினால் உயிரிழந்த ஒருவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 15,000 ரூபா நிதி அநேகமான குடும்பங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட வீட்டு உபகரணப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழ ங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவும் இவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையென இது தொடர்பாக ஆராய்ந்து வரும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளில் ஊழல் மோசடியில் ஈடுபடுவோர்க்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜா கூறினார்.

# பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சனத்தொகை கணக்கெடுப்பு

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றுள்ளது. சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் இறந்தவர்கள், மற்றும் காணாமல் போனவர்கள் போன்றோரின் விபரங்களும் உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் சுனாமி பாதுகாப்பு வலயம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான நிறுவனம் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

தெற்கில் அரசாங்கம் 100 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைக்கும் திட்டமொன்றினை முன்வைத்துள்ளபோதிலும் அதற்குப் பாராளுமன்ற அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை. அரசாங்கத்தின் இந்தத் திட்டம் இவ்வாறான அனர்த்தம் ஏற்பட்டால் அதிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கம் கொண்டது. எனவே இத்திட்டத்தினை தாம் எதிர்க்கவில்லையென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங்கிணைப்பாளர் நீல்ரைட் கருத்து வெளியிட்டுள்ளார்.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி புதிய பள்ளிவாயல் கட்டிடத்தில் ஆரம்பம்

(பி.எம்.எம்.ஏ.காதர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்ட மருதமுனை ஷம்ஸ் மத்தியக் கல்லூரி மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜீம்மா பள்ளிவாயல் புதிய கட்டிடத்தில் ஆரம்பிக்கக்கட்டது.ஷம்ஸ் மத்தியக் கல்லூரியின் அதிபர் எச்.எம்.ஏ.வதூத் மற்றும் பிரதி அதிபாகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எடுத்த துரித நடவடிக்கையின் பயனாகவே நேற்று மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜீம்ஆ பள்ளிவாயலில் புதிய கட்டிடத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையின் பூரண அனுமதியுடன் பாடசாலையை நடாத்துவதற்கு முன்வந்துள்ளதாக அதிபர் எச்.எம்.ஏ. வதூத் தெரிவித்தார். 1600க்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்று வந்த இப்பாடசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சமூகமளித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. சகல ஆசிரியர்களும் சமூகமளித்தனர். பாதிக்கப்பட்ட மனோ நிலையிலும் பெருந்தொகையான மாணவர்களும், பெற்றோர்களும் பாடசாலை ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை மருதமுனை அல்மனால் மத்தியக் கல்லூரியும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. பெருந்தொகையான மாணவர்கள் சீருடையின்றி சமூகமளித்தனர். அனைவருக்கும் சீருடை மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அதிபர் எஸ். எல்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆசிரியர்களால் உளவள சிகிச்சை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமிக் கடலலைத் தாக்கத்தினால் வீடுகளை இழந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உளவள சேவைகளும், இயல்பு வாழ்விற்குத் திரும்புவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அனுசரணையுடன். கல்வி அமைச்சும், மாகாண கல்வியமைச்சும் இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று வலயக் கல்விப் பிரிவுகளிலும் 125 ஆசிரியர்கள் இதற்கென பயிற்சியளிக்கப்பட்டு நேற்று முதல் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று உளவளப் பாதிப்பிலிருந்து மக்களை மீட்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கென 275ஆசிரியர்களை மாவட்ட கல்விச் சேவையின் கற்பித்தல் நடவடிக்கையிலிருந்து மூன்று மாதங்களுக்கு பயிற்சிக் கொடுத்துள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.பவளகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 125 ஆசிரியரும், கல்குடா வலயத்தில் 85 பேரும், பட்டிருப்பு வலயத்தில் 25 பேரும் சேவைக்கென இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் வின்சன் உயர்தர மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நிறைவு பெற்றன.

## ஜெயந்திரர் விடுதலைக்கு இலங்கையில் யாகம்

(நமது நிருபர்)

வழக்குகளிலிலிருந்து ஜெயந்திரர் விடுபட வேண்டி இலங்கையில் 48 நாட்கள் சிறப்பு யாகம் நடத்தப்படும் என்று இலங்கை பக்தர்கள் கூறியுள்ளார்கள். கலவையில் தங்கியுள்ள ஜெயந்திரரை இலங்கைப் பக்தர்கள் மகுடபதி மன்னார் குணசேகரம் உட்பட பத்திற்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றனர். தமிழக அரசு ஜெயந்திரர் மீது பொய் வழக்குப் புகார் செய்து அவரைக் கைது செய்து அவரைச் சிறையில் அடைத்தது. அவரது விடுதலைக்காக இலங்கையில் பல்வேறு இடங்களில் நூற்றியெட்டுமுறை கூட்டுப்பிரார்த்தனை நடத்தப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர் தற்போது ஜெயந்திரர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளிலிருந்து அவர் மீள இலங்கையில் நூற்றியெட்டு இடங்களில் பெப்ரவரி 05ம் திகதி சிறப்பு யாகம் நடாத்தப்படும்.

# சர்வதேச இடம் பெயர் சேவையாளர் அமைப்பினர் இலங்கை வருகை

(நமது நிருபர்)

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் உடமைகள் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராய சர்வதேச இடம்பெயர் சேவையாளர் அமைப்பினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த குழுவினருடன் தொழில் அமைச்சர் அதாவுடன செனவிரட்ன இன்று விசேட பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபடவுள்ளார். வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுச் சென்றுள்ள இலங்கையர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு உதவக்கூடிய வழிவகைகள் குறித்து இதன்போது ஆராயப்படுமென தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுடன செனவிரட்ன கூறினார்.

வெளிநாடுகளில் தொழில் புரிவோரில் ஆழிப்பேரலை தாக்கத்தினால் உடமைகளை இழந்த குடும்பங்கள் குறித்து தகவல் திரட்டும் நடவடிக்கை ஓரளவு பூர்த்தியடைந்துள்ளதாக தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரை 4,000 குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தொழில் அமைச்சர் அதாவுடன செனவிரட்ன கூறினார். இவர்கள் தொடர்பான விபரங்களை பிரேதச செயலாளர்கள் ஊடாக தொடர்ந்தும் திரட்டி வருவதாக அவர் மேலும் கூறினார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சர்வதேச இடம் பெயர் சேவையாளர் அமைப்புடன் இணைந்து நிதியுதவி வழங்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# ஆலமிய்யாவின் இலங்கைக் கிளையின் தலைவர் காத்தான்குடிக்கு விஜயம்

(காத்தான்குடி நிருபர்)

அகில உலக றாபிததுல் ஆலமிய்யாவின் இலங்கை கிளையின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அல்ஹாஜ் எம்.எச்.முகம்மதுவும் அவரது குழுவினரும் நேற்று முன்தினம் காத்தான்குடிக்கு வருகை தந்து சுனாமியால் பாதிப்புக்குள்ளான மக்களு க்கு உதவிகளை வழங்கினர்.

காத்தான்குடிக்கு வருகை தந்த முன்னாள் அமைச்சர் முஹம்மது காத்தான்குடி சிலிங்கோ இன்வெஸ்ட்மன் குறூப்லிமிட்டட்டுக்கு விஜயம் செய்தார். அங்கு முன்னாள் பிரதி அமைச்சர், விமான நிலையத் தலைவர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், செலிங்கோமுகாமையாளர் எம்.ஐ. எம்.அப்துல்றா சீக்ஹாஜியார், பள்ளிவாயல் சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி ஏ.எல். அப்துல் ஜவாத் உட்பட பலர் வரவேற்றனர். அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமயலறை உபகரணங்களை முன்னாள் அமைச்சர் வழங்கி வைத்தார்.பின்னர் முன்னாள் அமைச்சர் முஹம்மதுவும் அவரது குழுவினரும், ஹிஸ்புல்லாவும் பூநொச்சிமுனைக்கு சென்று சுனாமியால் சேத மடைந்த பாடசாலைகளுக்கு பதிலாக கொட்டிலில் அமைக்கப்பட்ட பாடசாலையை முஹம்மத்திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சுனாமியால் சேதத்துக்குள்ளான றிஸ்விநகர், காத்தான்குடி மாவட்ட வைத்தியசாலை, அன்வர் மஸ்ஜித்நகர், கர்பலாநகர், பாலமுனை, சிகரம் ஆகிய அகதி முகாம்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறியதுடன் மேலும் தேவையான உதவிகளை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

# சமய விழிப்புணர்வும், கூட்டுப் பிரார்த்தனையும்

(அ.நிசாந்)

இந்து சேவா சங்கமும், சிவ தொண்டர் அமைப்பும் ஏற்பாடு செய்த சமய விழிப்புணர்வும் கூட்டுப் பிரார்த்தனையும் நேற்று கோமாரி நலன்புரி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுனாமி ஆழிப் பேரலையினால் உயிர் நீத்த உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டிய பிரார்த்தனையும், கோமாரி நலன்புரி நிலையத்தை அண்டிய மலையின் உச்சியில் விநாயகர்ஆலயம் அமைப்பதற்கான விக்கிரக பிரதிஷ்டையும் இடம்பெற்றதுடன் அதற்கான நாமம் உச்சிப் பிள்ளையார் ஆலயம் என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் கோமாரி நலன்புரி நிலையத்திலுள்ள அனைத்து மக்களும் இந்து சேவா சங்கத் தொண்டர்கள், சிவதொண்டர் அமைப்பினர் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பலியான முஸ்லிம்களுக்கு 40 வது நாள் நினைவு அனுஷ்டிப்பு.

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியில் சிக்கி பலியான முஸ்லிம்களின் 40வது நாள் எதிர்வரும் 5.2.2005சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

அன்றைய தினத்தை பிரார்த்தனை தினமாகப் பிரகடனம் செய்து இறைவனிடம் துஆக் கேட்க வேண்டுமென பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அன்றைய நாளில் சம்மாந்துறையில் பிரதான அஞ்சலிக் கூட்டமும், கத்தமுல் குர்ஆன் ஓதி தமாம் செய்யும் நிகழ்வும் இடம்பெற விரிவான ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

சுனாமி ஏற்பட்டு தொடர்ந்து 3 நாட்களாக 3612 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட சம்மாந்துறை மலையடிக் கிராம மையவாடியில் இவ்வைபவம் நடைபெறவுள்ளது. சுனாமியின் நினைவாக அம்மையவாடியை நவீனமாக்கி நினைவுத் தூபியை நடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று கரையோரப் பிரதேச தமிழ் முஸ்லிம் மக்களை அங்கு ஒன்று கூடி அஞ்சலி செலுத்தவும், நடைபெறும் அன்னதானத்தில் பங்குகொள்ளுமாறும் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அன்பான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்த 40வது நாள் நினைவஞ்சலியையும், அன்னதானத்தினையும் பாரியளவில் நடத்துவதற்கான ஏற்பாட்டுக் குழுக் கூட்டம் சனிக்கிழமையன்று சம்மாந்துறை மக்கள் பணிமனையில் நடை பெற்றது.

சம்மாந்துறையிலுள்ள பல மக்கள் பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு அந்நிகழ்ச்சியைச் சிறப்பாக நடாத்த பூரண ஒத்துழைப்பு நல்குவதாகக் கூறினர். பிரதியமைச்சரின் செயலாளர் வை.பி.சலீமின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

# அனர்த்தம் எவ்வாறு நடந்தாலும் அதற்கு முகம் கொடுத்து கல்விக்கு முக்கியம் கொடுக்க வேண்டும்.

## - அதிபர் எச்.எம்.ஏ.வதூத் -

(மருதமுனை நிருபர்)

எந்த அனர்த்தம் எவ்வாறு நடந்தாலும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். என்ன பிரச்சினை ஏற்பட்டாலும் அதற்கெல்லாம் முகங்கொடுத்து தொடர்ச்சியாகப் பாடசாலை நடாத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். இவ்வாறு தெரிவித்தார் ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் எச்.எம்.ஏ.வதூத்.

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஷம்ஸ் மத்திய கல்லூரியை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாயல் புதிய கட்டடத்தில் கடந்த 25ம் திகதி ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கல்வியிலும், ஏனைய துறைகளிலும் மேலோங்கி நின்ற எமது பாடசாலை ஆழிப் பேரலையால் அழிந்துள்ளது. இருந்த போதிலும் இறைவனின் உதவியையும், தன்னம்பிக்கையையும் தனவந்தர்களின் ஆதரவையும் மூலதனமாகக் கொண்டு பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையின் அனுமதியோடு ஆரம்பித்திருக்கின்றோம். மாணவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி பாடசாலைக்குச் சமூகம் தர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு உழ்ஹிய்யா இறைச்சிப் பொதிகள் வழங்கல்

(மருதமுனை நிருபர்)

மருதமுனை தௌஹீத் ஜமா அத் அமைப்பின் ஏற்பாட்டில் புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு மருதமுனைப் பிரதேசத்திலுள்ள அக்பர் கிராமம், பெரிய நீலாவணை ஆகிய இடங்களில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 4000 குடும்பங்களுக்கு உழ்ஹிய்யா இறைச்சிப் பொதிகள் அண்மையில் பெரியநீலாவணை பாக்கியத்துஸ் ஸாலிஹாத் பள்ளிவாயலில் வழங்கப்பட்டது.

மருதமுனை தௌஹீத் ஜமாவுத் அமைப்பின் முக்கியஸ்தர்களான மௌலவிகளான எஸ்.எம்.எம்.முஸ்தபா, மௌலானா (ஜமாலி) எம்.எம்.ஏ.எச்.மலீக் (கபூரி), எம்.எல்.எம்.முபாறக் (ஸலபி) ஆகியோரின் நெறிப்படுத்தலில் உழ்ஹிய்யா இறைச்சி விநியோகவைபவம் நடைபெற்றது.

# கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணியில் சுவாட் அமைப்பு

(அ.நிசாந்)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணியில் சுவாட் அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளான பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை போன்ற பகுதிகளில் கட்டட இடிபாடுகளை அகற்றி சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இத்துப்பரவு செய்யும் பணியில் சுவாட் அமைப்பின் தொண்டர்கள் கடந்த நான்கு நாட்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதே வேளை அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் சுகாதார தேவையினையும் ஒக்ஸ்பாம் நிதியுதவியின் கீழ் மேற்கொண்டு வருகின்றனர். தம்பட்டை, நலன்புரி நிலையத்தில் 18 மலசல கூடங்களையும் ஒரு குடிநீர்க் கிணற்றினையும் அமைத்து வருகின்றனர்.

# விவசாயிகள் வேண்டுகோள்

(நமது நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு உரிய நஸ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெரும்போக உத்தியோகத்திரிடம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையினால் மட்டக்களப்பு மாவட்டதிதில் பல்லாயிரக் கணக்கான விவசாயிகளின் நெற்காணிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் உரிய நேரத்திற்கு விவசாயிகள் பசளை, கிருமிநாசினி வகைகளை இட முடியாமல் பல சிரமங்களை எதிர்கொண்டனர் எனவும் இவர்களுக்கு உரியமுறையில் நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள இந்து சேவா சங்கப் பணிமனையில் சங்க உறுப்பினர்கள் சுனாமியால் உயிரிழந்த குடும்பங்களுக்கும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்காக பொருட்களைப் பொதி செய்வதைப் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும்:- மாறன்)

# மட்டு மாவட்ட பாடசாலைகளை திட்டமிட்டு ஆரம்பிக்க முடியாத நிலை

(சி.பி.ஹரிச்சந்திரா)

நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள் இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்றப்படுவதாகத் தெரிவித்தும் இதுவரை மாற்றப்படாததால் பாடசாலைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளருமான எம்.பவளகாந்தன் தெரிவித்தார்.

ஏற்கனவே அரச அதிகாரிகளால் நேற்று முன்தினம் 30ம் திகதிக்குள் பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதும் இன்று வரை அவர்கள் மாற்றப்படாத நிலை காணப்படுவதால் திட்ட மிட்டபடி பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதே வேளை தமிழர் புனர்வாழ்வுக் கழக மாகாணப்பணிப்பாளர் எஸ்.சீசருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது கீரிமடு, சத்துருக்கொண்டான் ஆகிய பகுதிகளில் 3000 பேர்வரை தங்க வைப்பதற்கான ஓலைக் கூடாரங்கள் மற்றும் அதற்கான மலசலகூட வசதிகள் அமைக்கப்படுவதால் இவர்கள் மீள் குடியேறுவதில் சற்று தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் எதிர்வரும் புதன் கிழமைக்குள் இவை பூர்த்தியடைந்து விடுமெனவும் அவர் தெரிவித்தார்.

# காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியை இடம் மாற்றத் தீர்மானம்.

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவின் ஒரேயொரு 1ஏபி பாடசாலையான விபுலானந்த மத்திய கல்லூரியை இருந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாற்றத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காரைதீவு சண்முகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள காணியில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுவரை காரைதீவு இ.கி.மி. பெண்கள் பாடசாலையில் காலை, மாலை பாடசாலையாக இயங்கி வருகின்றது.

மேற்படி விபுலானந்தா மத்திய கல்லூரி அதிபர் கே.முத்துலிங்கம் தலைமையில் சனிக்கிழமையன்று பெண்கள் பாடசாலையில் பெற்றோர் நலன்விரும்பிகள் கூட்டமொன்று நடைபெற்றது. பா.உ க.பத்மநாதன், விடுதலைப்புலிகளின் காரைதீவு அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கவேல், முக்கியஸ்தர் புஸ்பன் உள்ளிட்டோருடன் 300 பொது மக்களும் கலந்து கொண்டனர். விபுலானந்தா மத்திய கல்லூரி சுனாமியால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடலிலிருந்து இது 300 மீற்றருக்குள் இருக்கின்றது. இதனால் பல பெற்றோர்கள் அங்கு மீண்டும் பாடசாலையை அமைப்பதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. சிலர் அங்கு தான் அமைய வேண்டுமென்று கூறுகின்றனர்.

# கல்முனைப் பிராந்திய கரையோர மக்களுக்கு உளச் சீராக்கம்.

(வி.ரி.சகாதேவராஜா)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிராந்திய கரையோர மக்களுக்கு உளச்சீராக்கம் செய்ய சகவாழ்வு மன்றம் அக்ஷன் எய்ட் ஸ்தாபனத்துடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக மக்களிடம் சென்று கலந்துரையாடுவதற்காக 100 தொண்டர்களுக்கு 3 நாள் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெற்று வரும் இப்பயிற்சி நெறி நேற்றுடன் நிறைவடைந்தது. இந்தியா மும்பை டாட்டா நிறுவன உளவியல் திணைக்கள சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சிறிலதா ஜீவா, இந்தியாவைச் சேர்ந்த சிரேஷ்ட உளவியலாளர்களான திருமதி ஸீனா, சீதால் ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். சகவாழ்வு மன்ற மாவட்ட இணைப்பாளர் ஐ.எம்.இப்றாகிம், நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் எம்.ஐ.சதார் ஆகியோர் முன்னிலையில் பயிற்சி நெறி நடைபெற்றது. மூன்று நாள் பயிற்சியின் பின்பு ஒரு வருட காலம் மேற்படி தொண்டர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடன் பழகி உளச்சீராக்கத்தில் ஈடுபடுவர்.

## கல்முனைப் பகுதி குடியிருப்பு வசதிகளை மீனவர்களின் நன்மை கருதி 50 மீற்றராக குறைக்க வேண்டும்

**-மீன்பிடியாளர் அமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர்-**

கடற்கரையிலிருந்து 100 மீற்றர் எல்லைக்குள் குடியிருப்பு வசதிகள் எதனையும் ஏற்படுத்துவதில்லை என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை கல்முனைப் பிராந்திய மீனவர்களின் நன்மை கருதி தளர்த்தி 50 மீற்றராகக் குறைக்க வேண்டும். என கல்முனைப் பிரதேச மீன்பிடியாளர்களின் அமைப்புக்கள் அரசிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக மீன்பிடியாளர் அமைப்புக்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேன வீஜேசிங்க, அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், தினேஸ் குணவர்த்தன ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான மருதமுனை, கல்முனை, இஸ்லாமாபாத், பாண்டிருப்பு, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஆகிய பிரதேசங்கள் அண்மையில் ஏற்பட்ட சுனாமிப் பேரலை காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. இந்த அனர்த்தத்தால் தொழில் வாய்ப்புக்களை இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டது கடற்கரையை அண்டி வாழ்ந்த மீனவர் சமுதாயமாகும்.

கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்குள் எதுவித குடியிருப்புக்களையும் ஏற்படுத்தக் கூடாது. என்பது மீனவர் சமூகத்திற்கும் இவர்களின் தொழிலுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கை காரணமாக இப்பிரதேசத்திலுள்ள ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் தமது பாரம்பரிய நிலங்களையும் வீடுகளையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கல்முனைப் பிரதேசத்தை பொறுத்தவரையில் அரசாங்கம் தீர்மானித்தவாறு 100 மீற்றருக்கு அப்பால் குடியிருப்பு நிலங்களை ஏற்படுத்தக்கூடிய நிலவசதிகள் இல்லை. அத்துடன் கடற்கரையை அண்டிய பிரதேசத்தை விட்டு வேறு இடங்களுக்குச் சென்றால் இப்பிரதேச மீனவர்களின் மீன்பிடித் தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டு விடும்.

இதனால் இப்பிரதேச மீனவர்கள் எதுவித வருமானமும் இல்லாத நிலைக்கு உட்பட்டு விடுவார்கள். எனவே, கல்முனைப் பிரதேசத்திலுள்ள கடற்கரை வீதியை எல்லையாகக் கொண்டு கீழ்ப் பகுதியில் குடியிருப்பு வசதியில்லாத தொடர்மாடி வீடுகளை கிழக்கிலிருந்து மேற்குப் புறமாக அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு திட்டமிட்டு தொடர்மாடி வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் கடல் பேரலைத் தாக்குதலிலிருந்து கல்முனைப் பிரதேச மீனவர்களை காப்பாற்ற முடிவதுடன் மீனவர்களின் மீன்பிடித் தொழிலை தடையின்றித் செய்வதற்கும் வழி ஏற்படும். எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பணிப்பாளர் யாழ் விஜயம்

(ஆ.கந்தசாமி)

கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சின் பணிப்பாளர் பியசேன உட்பட்ட அதிகாரிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் யாழ் குடா நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் யாழ்குடாநாட்டு கடற்றொழில் துறைக்கு ஏற்பட்ட இழப்புக்கள் சம்மந்தமான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக யாழ் வந்த இக்குழுவினர் யாழ் நகரிலுள்ள கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களத்தில் வைத்து கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், மற்றும் கடற்புலிகள் அமைப்பைச் சேர்ந்த மோகன், மற்றும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகளும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் போது சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டு கரையோரப் பிரதேச மக்களை மீள்குடியமர்த்துவதற்கு ஏதுவாகக் கடற்படையினரால் இடப்பட்டுள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு அப்பகுதிகளில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படல் வேண்டும் என கடற்புலிகளின் பிரதிநிதிகளாலும், கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளாலும் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் நலிவடைந்த யாழ்குடாநாட்டு கடற்றொழில் துறையை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளும் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப் பட்டது.

## மீட்புப் பணிகளில் ஈடுபட ஜே.வி.பி தொழிற்சங்க ஊழியர்களுக்கு அனுமதி மறுப்பு

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு ஜே.வி.பி தொழிற் சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த 500 ஊழியர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு மின்சார சபையிடம் அனுமதி கோரியுள்ளதாகவும் அதேவேளை மின்சார சபை இவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட 50 தொழிலாளர்களையும் அங்கு செல்ல விடாது இலங்கையின் மின்சார சபை தடை செய்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. இதேவேளை காலித் துறைமுகத்தில் இடம்பெற்ற மீட்பு நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்கு ஜே.வி.பி உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் துறைமுக அதிகார சபையால் இதற்கான அனுமதி வழங்கப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டு உறவினர் வீடுகளில் தங்கியுள்ளோரையும் கவனிக்க வேண்டும்

**-இந்து சேவா சங்க மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுதர்சனன்-**

(மாறன்)

சுனாமி அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ள மக்களையும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருவோர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்து சேவா சங்க மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுதர்சனன் தெரிவித்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்து சேவா சங்கத்தின் செயற்பாடு பற்றி கேட்டறிந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது உறவுகள், உடமைகள் என்பவற்றை இழந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்திருப்பவர்கள் போன்று சிலர் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது.

நடுத்தரவர்க்கமாக இருந்த இவர்கள் இன்று அகதிகளாய் இருப்பதனால் கேட்பதற்கு சற்று சங்கடப்படுகின்றார்கள். எனவே முகாம் மக்களுக்கான நிவாரணங்களை வழங்கி வருபவர்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போர்களையும் கவனிக்க வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல நிறுவனங்களின் உதவிகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகின்றது. இதில் இந்து சேவா சங்கமும் தனது பணியை மேற்கொண்டு வருகிறது.

இந்து சேவா சங்கமானது சுனாமி அனர்த்ததிற்கு முன்பு சகல மாவட்டங்களிலும் ஆன்மீகப் பயிற்சிகளை நடாத்தி வந்தது. இறுதியில் களுவாஞ்சிகுடியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது.

பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு தஞ்சமடைந்துள்ள மக்களை ஒழுங்கு படுத்துவதில் எமது பணி ஆரம்பமானது. அதன் பின் தற்காலிக நிவாரணப் பணிமனையொன்றினை அமைத்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான குடிநீர், உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், சமையலறைப் பாத்திரங்கள் போன்றவற்றை வழங்கி வருகின்றோம். எமது உறுப்பினர்கள் இரவு பகல் பாராது இச்சேவை யினை மேற்கொண்டு .வருகின்றனர் என்றார்.

## அமெரிக்கப் படையினரால் காரைநகரில் சிறிலங்கா படையினருக்கு பயிற்சி

(ஆ.கந்தசாமி)

சுனாமி அனர்த்த நிவாரண சேவைகளுக்கென யாழ்குடா நாட்டிற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க கடற்படையினரின் ஒரு தொகுதியினர் காரைநகர் கடற்படைத் தளத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா படையினருக்கு சில பயிற்சிகளை வழங்கி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. காரைநகரில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினருக்கு மருத்துவ முறைகள் பற்றிய விஷேட பயிற்சிகளை வழங்குவது என்ற பேரிலேயே அமெரிக்கப்படையினர் 50 பேர் காரைநகர் கடற்படைத் தளத்தில் தங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றுவதற்கென யாழ் வந்துள்ள அமெரிக்கப் படைகள் காரைநகர் கடற்படைத் தளத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளமையும் அவர்கள் சிறிலங்காப் படையினருக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றமையும் பல உள்நோக்கம் கொண்டவையென குடாநாட்டு அரசியல் பிரமுகர்கள் பலரும் தமது ஐயத்தை வெளியிட்டு வருகின்றனர்.



**ஆழிப்பேரலை அனர்த்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மருதமுனை அக்பர் கிராமத்தை முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான றவூப் ஹக்கீம் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (படம்:- பி.எம்.எம்.ஏ.காதர்)**

## பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கை உரிய முறையில் இல்லை

**சமூக சேவைகள் பிரதி அமைச்சர் சந்திரசேன**

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லையென பதில் சமூக சேவைகள் அமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிகாரிகளின் முறையான நடவடிக்கைகள் மற்றுமொரு சுனாமியாகுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உதவி தேவைப்படும் பெரும்பாலான மக்களுக்கு அந்த உதவிகள் இது வரைக் கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் கையிருப்பில் உள்ள போதிலும் அவை அந்த மக்களைச் சென்றடையவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நிவாரண வழங்கலில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிகாரிகளின் முறையற்ற நடவடிக்கைகளால் நிவாரண நடவடிக்கை பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்-தொழிநுட்பக் கல்லூரியில் குறுகிய காலப் பயிற்சி நிறைவு

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான குறுகிய கால பயிற்சிநெறி நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாக கல்லூரி அதிபர் எம்.குணரெட்ணம் தெரிவித்தார்.

கடந்த 26ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மேசன், தச்சு, குழாய் பொருத்துதல், மின்னிணைப்பு போன்ற இப்பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் கொடுப்பனவும், சான்றிதழ்களும் பிறிதொரு தினத்தில் வழங்கப்படவுள்ளதாகவும், இப்பயிற்சி நெறியினை தொழில்சார் நிபுணத்துவ நிறுவனமும் தொழில்பயிற்சி திணைக்களமும் இணைந்து நடாத்தியுள்ளதாகவும் கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார்.

## வடகிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ**

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் எந்தவிதமான வேறுபடும் காட்டப்பட மாட்டாது என அவர் குறிப்பிட்டார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் சுனாமியால் இறந்த மக்களுக்கான அஞ்சலியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதமர் இந்தக் கருத்துரைகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மங்கள சமரவீரர் உரையாற்றும் போது இன்றைய தினம் புனர் நிர்மானம் சம்மந்தமான முக்கிய ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படவிருப்பதாகக் கூறினார். இதேவேளை மாத்தறையில் புதிய நகரமொன்று உருவாக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## காத்தான்குடி நகரசபை ஊழியர்களுக்கு டிசம்பர் மாதச் சம்பளம் இதுவரை இல்லை

**உத்தியோகஸ்தர்கள், சுகாதார தொழிலாளர்கள் விசனம்**

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி நகரசபை ஊழியர்களுக்கு டிசம்பர் மாதத்திற்கான சம்பளம் இற்றைவரை வழங்கப் படாததால் இங்கு கடமை புரியும் உத்தியோகஸ்தர்கள் முதல் சுகாதார தொழிலாளர்கள் வரை பல்வேறு சிரமங்களையும், அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் பற்றி சம்மந்தப்பட்ட அதிகாரியிடம் கேட்டபோது கடந்த காலங்களில் இவர்களுக்கான மாதாந்த வேதனம் வடகிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது அரசாங்கத்தின் புதிய நடைமுறையின் கீழ் முன்னர் போல் முழுமையாகச் சம்பளம் வழங்கப்படாத நிலயிலேயே சம்பளம் வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆழிப் பேரலையால் ஆட்டங்கண்ட கல்விப்புலம்

- 24பாடசாலைகள் முற்றாகச் சேதம்.
- 15 பாடசாலைகள் பாதி சேதம்.
- 16 ஆசிரியர்கள் பலி!
- 1165 மாணவர்கள் பலி!
- 44 பாடசாலைகளில் நலன்புரி முகாம்கள்.
- பெற்றோர் இருவரையும் இழந்த மாணவர்கள் 136.
- தாயை / தந்தையை இழந்தோர் 452 பேர்.



அம்பாறை மாவட்டம் அம்பாறை, கல்முனை எனும் இருபெரும் கல்வி மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

ஆழிப் பேரலையின் தாக்கத்திற்குட்பட்டது கல்முனைக் கல்வி மாவட்டமாகும்.

கல்முனைக் கல்வி மாவட்டத்தில் கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய மூன்று வலயங்கள் உள்ளன. இவற்றில் 214 பாடசாலைகள் உள்ளன.

எனினும், கரையோரப் பிரதேசத்திலுள்ள கல்முனை, அக்கரைப்பற்று வலயங்களே ஆழிப் பேரலையால் நேரடியாகத் தாக்குதலுக்குள்ளானவை.

கல்முனையில் 57 பாடசாலைகளும், அக்கரைப்பற்றில் 97 பாடசாலைகளும், சம்மாந்துறையில் 60 பாடசாலைகளும் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.அப்துல் நிஷாம் தமது வலயத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி பல தகவல்களைத் தந்தார்.

**வலயத்தில் மொத்தம் 57 பாடசாலைகள் முற்றாகச் சேதம் அடைந்தன. இதனால் 10705 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி - 1542, பெரிய நீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயம் - 586, கல்முனை ஸ்ரீ மாமாங்க வித்தியாலயம் - 195, கல்முனைக்குடி அல் - பகுரியா வித்தியாலயம் - 1619, கல்முனைக்குடி அல் - மிஷ்பா வித்தியாலயம் - 1753, சாய்ந்தமருது அல் - ஜலால் வித்தியாலயம் - 1002, சாய்ந்தமருது றியாமுல் ஜென்னா வித்தியாலயம் - 209, சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் வித்தியாலயம் - 1758, கல் முனை இஸ்லாபாத் முஸ்லிம் வித்தியாலயம் - 58, பாண்டிருப்பு மகா விஷ்ணு வித்தியாலயம் - 110, நிந்தவூர் அல் - பதுரியா வித்தியாலயம் - 113, நிந்தவூர் அல் - அதான் வித்தியாலயம் - 49, காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி - 1126, காரைதீவு விக்னேஸ்வரா வித் தியாலயம் - 176, காரைதீவு அல் - ஹுசைன் வித்தியாலயம் - 419.

பகுதியாகக் கல்முனை சாஹிராக் கல்லூரி - 2172, பெரிய நீலாவணைச் சரஸ்வதி வித்தியாலயம் - 106, ஆகிய பாடசாலைகள் பகுதியாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளாகும்.

**கல்முனை வலயத்தில் 11 ஆசிரியர்களும், இரு கல்வி சாரா ஊழியர்களும் ஆழிப் பேரலைக்குப் பலியாகியுள்ளனர்.**

செல்வி. எம்.ஈஸ்வர தயாநிதி - மருதமுனை ஷம்ஸ் வித்தியாலயம், எம்.சதுர்டீன் - மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரி, செல்வி. சிவானந்த நாயகம் குகப்பிரியா - கல்முனை பாத்திமா கல்லூரி, செல்வி. றிக்குவல் சாரல் - கல்முனை பாத்திமா கல்லூரி, திருமதி. லீலாவதி ஏ.ரணதுங்க - கல்முனை மாமாங்க வித்தியாலயம், திருமதி. சிவராணி மோகனகுமார் - காரைதீவு பெண்கள் பாடசாலை, திருமதி. கஜேந்திரராணி ராஜேந்திரன் - விபுலானந்தா மத்திய கல்லூரி, திருமதி. இந்திராணி கண்ணதாஸன் - காரைதீவு சண்முகா வித்தியாலயம், திருமதி. அங்கயற்கண்ணி ஞானேந்திரன் - காரைதீவு சண்முகா வித்தியாலயம், திருமதி என்.எம்.சித்தி மர்ஜுனா - கல்முனை ம..மூத் மகளிர் கல்லூரி, திரும்தி. இந்திராணி வெற்றி வேல் - கல்முனை உவெஸ்லி கல்லூரி.

**இதைவிட இரு ஊழியர்கள் பலியாகியுள்ளனர்.**

எஸ். நவரத்தினம் - வலயக்கல்விப் பணிமனை, கல்முனை. எஸ்.ரி. இந்திரகுமார் - கல்முனை இ.கி.மி.வித்தியாலயம்.

மாணவர்கள் 36792 பேர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 18472 பேர் ஆண்கள் 18320 பேர் பெண்களாவர். மரணித்தவர்கள் 1014 பேர்,

இவர்கள் அனைவருக்கும் சீருடை, பாடநூல்கள், அப்பியாசக் கொப்பிகள், கற்றல் உபகரணங்கள், பாதணிகள் தேவைப்படுகின்றன. அரசும், யுனிசெப் ஸ்தாபனமும் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**கல்முனை வலயத்தில் 24 பாடசாலைகள் தற்போது அகதி முகாம்களாக இயங்கி வருகின்றன.**

கல்முனை வெஸ்லிக் கல்லூரி - 492 அகதிகள், கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி - 2724 அகதிகள், கல்முனை ம..மூத் மகளிர் கல்லூரி 1936 அகதிகள், மருதமுனை அல் - மனார் மகா வித்தியாலயம் - 2594 அகதிகள், பாண்டிருப்பு மகா வித்தியாலயம் - 1325 அகதிகள், கல்முனை இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம் - 621 அகதிகள், பெரிய நீலாவணை விஷ்ணு வித்தியாலயம் 3840 அகதிகள், மருதமுனை அல் - ஹம்றா வித்தியாலயம் - 2593 அகதிகள், பாண்டிருப்பு அல் - மினன் - 1132 அகதிகள், பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம் - 275 அகதிகள், சேனைக்குடியிருப்பு கணேசா வித்தியாலயம் - 3963 அகதிகள், கல்முன்னை விவேகானந்தா வித்தியாலயம் - 251 அகதிகள், கல்முனைக்குடி அல் - அஷ்ரா வித்தியா லயம் - 1704 அகதிகள், கல்முனைக்குடி அல் - சுஹறாரா வித்தியாலயம் - 2096 அகதிகள், சாய்ந்தமருது அல் - கமறூன் வித்தியாலயம் - 1856 அகதிகள், சாய்ந்தமருது ஜி.எம்.எம்.எஸ். - 1332 அகதிகள், சாய்ந்தமருது அல் - ஹிலால் வித்தியாலயம் - 3117 அகதிகள், காரைதீவு சண்முகா வித்தியாலயம் 2102 அகதிகள், காரைதீவு ஆண்கள் பாடசாலை - 1503 அகதிகள், காரைதீவு சபீனா வித்தியாலயம் - 2103 அகதிகள், நிந்தவூர் அல் - மதீனா வித்தியாலயம் - 481 அகதிகள், நிந்தவூர் இமாம் ஹஸாவி வித்தியாலயம் - 892 அகதிகள், நிந்தவூர் அறபா வித்தியாலயம் - 1102 அகதிகள், நிந்தவூர் அலிமீனா வித்தியால்யம் - 958 அகதிகள்.

மேற்படி 24 பாடசாலை நலன்புரி நிலையங்களில் 40781 அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் மாணவர்கள் 17836 பேர் முகாம்களில் வாழ்கின்றனர்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதால் இந்த 24 பாடசாலை முகாம்களில் 04 முகாம்களை விடுத்து ஏனைய 20 முகாம்களையும் மூடவேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.




ஆனால் அகதிகள் இன்னும் அகன்றபாடில்லை. படிப்படியாகவே அகதிகள் வெளியேறுவார்கள். 20 ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுத்துள்ளோம் என்று பணிப்பாளர் நிஷாம் கூறினார்.

ஆக சாய்ந்தமருது அல் - கமறூன் பாடசாலை, காரைதீவு இ.கி.மி. ஆண்கள் பாடசாலை, நிந்தவூர் அறபா வித்தியாலயம், நிந்தவூர் இமாம் கஸாலி வித்தியாலயம் என்பனவே இனிமேல் நலன்புரி முகாம்களாக இயங்கும்.

இதேவேளை, தற்காலிக நிந்தவூர் வைத்தியசாலை, நிந்தவூர் அல் - மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும், களஞ்சியசாலையாக மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரியும், இராணுவ விடுதியாக நிந்தவூர் அல் - மசியம் வித்தியாலயமும் இயங்கி வருகின்றன.





கல்முனை வலயத்தின் 57 பாடசாலைகளில் 1497 ஆசிரியர்களும், 36792 மாணர்களும், இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆழிப் பேரலையால் 11 ஆசிரியர்களும், 1165 மாணவர்களும் குறைந்துள்ளனர்.

**வீ.ரீ.சகாதேவராசா**

ஒலுவில் அல் - அஸ்ஹர், ஆலிம்நகர் அல் - அக்ஸா, ஆலையடிவேம்பு கண்ணகி வித்தியாலயம், இராம கிருஷ்ணா கல்லூரி, இராம கிருஷ்ணா வித்தியாலயம், திருக்கோவில் கனகரெட்ணம் வித்தியாலயம், தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம், கோரைக்களப்பு சக்தி வித்தியாலயம், தாண்டியடி வித்தியாலயம், தம்பிலுவில் மத்திய கல்லூரி, சாகாமம் தமிழ் வித்தியாலயம், பொத்துவில் தாருல் பலாஹ் வித்தியாலயம், அல் - இர்பான் வித்தியாலயம், ஊறணி சரஸ்வதி வித்தியாலயம், இன்ஸ் பெக்டர் ஏற்றம் வித்தியாலயம், பொத்துவில் முஸ்லிம் வித்தியாலயம், அக்கரைப்பற்று ஆயிஷா வித்தியாலயம், ஹாகிறா வித்தியாலயம் என்பன இயங்கி வருகின்றன.

களஞ்சிய சாலைகளாக அக்கரைப்பற்று திருநாவுக்கரசு வித்தியாலயம், கோளாவில் விநாயகர் வித்தியாலயம், இராணுவ விடுதியாகப் பொத்துவில் மெ.மி.த.க.பாடசா லையும், சிங்களப் பாடசாலையும் இயங்கி வருகின்றன.

**கல்விப் பணிப்பாளர் ஹாசிம் மேலும் கூறுகையில்:-**

தற்காலிக கூடாரம், நீர் வசதி, விஞ்ஞான ஆய்வு கூடம் போன்ற பல வசதிகள் தேவைப் படுவதாகக் கூறுகிறார்.

அக்கரைப்பற்று வலயம் நிலத்தொடர்பற்றி இருப்பதால் அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் என மூன்று துண்டுகளாகப் பிரிந்துள்ளன.

சுமார் 100 ஆசிரியர்கள் ஒலுவில் பாலத்திற்கு வடக்கில் இருந்து வருபவர்கள் தற்காலிகமாக அவர்கள் அங்கு ஒப்பமிடுகின்றனர்.

**அக்கரைப்பற்று வலயம்**

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். எம்.ஹாசிம் தகவல்கள் பலவற்றைத் தந்தார்.

வலயத்தில் 97 பாடசாலைகள் இருந்தன. அவற்றில் 09 முற்றாகவும், 13 பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

**முற்றாகச் சேதம் அடைந்த பாடசாலைகள்:-**

கோமாரி மெ.மி.த.க., பொத்துவில் அல் - ஹிதாயா வித்தியாலயம், பொத்துவில் சிங்கபுர சிங்கள வித்தியாலயம், பொத்துவில் அல் - பாஹியா வித்தியாலயம், தம்பட்டை தமிழ் வித்தியாலயம், திருக்கோவில் அருணோதய வித்தியாலயம், பாலக்குடா பாலவிநாயகர் வித்தியாலயம், அக்கரைப்பற்று அல் - பதுர் வித்தியாலயம், ஜாயிஸா வித்தியாலயம் என்பனவாகும்.

**அக்கரைப்பற்று வலயத்தில் இரு ஆசிரியர்கள் பலியாகியுள்ளனர். வருமாறு:-**

பொத்துவில் மத்திய கல்லூரி. ஏ.எல்.ம..மூத்லெவ்வை, எஸ். சுகந்தி - தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயம், 152 மாணவர்களும் பலியாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு "ஏ" வகை கதிரை, மேசைகள் - 3850, "பீ" வகை கதிரை, மேசைகள் - 4950, "சீ" தரக் கதிரை, மேசைகள் - 2750 தேவைப படுவதாகவும், ஆசிரியர் மேசை, கதிரைகள் - 510, 1100, கரும்பலகை - 450 தேவைப்படுவதாகவும் பணிப்பாளர் ஹாசிம் மேலும் கூறினார்.

---

*. கடந்த 40 ஆண்டுகளில் உலகை உலுக்கிய பெரிய பூமி அதிர்வு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி ஏற்பட்டது.

*. 1964ம் ஆண்டு 9.2 ரிச்டர் அளவில் சுமத்திரா தீவின் கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூமி அதிர்வுகளின் பின்னர் கடந்த டிசம்பா 26ம்திகதியில் ஏற்பட்ட பூமி அதிர்வே மிகப் பெரிய அதிர்வாகும்.

*. 1896ம் ஆண்டு சுனாமி பேரலை ஜப்பானை தாக்கிய போது இராட்சத கடல் அலை 80 அடி உயரம் வரை உயர்ந்துள்ளது.

*. 1958ம் ஆண்டு அமெரிக்காவில் விதுயா விரிகுடாவில் ஏற்பட்ட சுனாமி அலையே உலகிலே மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட சுனாமி இராட்சத அலையாகும். இதன் உயரம் 516 மீற்றராகும்.

*. சுனாமி வருவதற்கான அறிகுறி கடலின் நிறம் மாறிக் காணப்படுவதுடன். கடல் 100 மீற்றர் தொடக்கம் 200 மீற்றர் வரை பின்னோக்கிப் போகலாம்.

*. கடலில் ஏற்படும் சுனாமிக்கான அதிர்வை கப்பலில் இருந்து பார்க்கவோ அல்லது உணரவோ முடியாது. விமானத்தில் இருந்தும் அவதானிக்க முடியாது. ஆழ் கடலில் இந்த அலையின் வேகம் ஆகாய விமானங்கள் செல்லும் வேகத்தை ஒத்ததாக இருக்கும். அதாவது மணிக்கு 800 முதல் 900 கிலோ மீற்றராகும்.

# எம்.ஜி.ஆரும் புலிகளும்

## விடுதலைக்கு வித்திட்ட மாமனிதர்

[சென்றவாரத் தொடர்ச்சி.....]

உமாமகேஸ்வரனையும் முதலில் சந்திப்பாரா? என்று கேட்டேன். புலிகளின் தலைவர் பிரபாகரனு



க்கும்? புளொட்டின் தலைவர் உமாவுக்கும் மத்தியிலான பகை, முரண்பாடு பற்றி அலெக்ஸ்சாந்தர் நன்கு அறிவார். உமாவை பிறிதொரு தினத்தில் முதலமைச்சர் சந்திப்பார் என்றும், முக்கியமாகப் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் சந்திப்பதையே அவர்பெரிதும் விரும்புகின்றார் என்றும் அலெக்ஸ்சாந்தர் சொன்னார்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது என்றாகி விட்டது. முதல் சந்திப்பில் எமது இயக்கத்தை அறிமுகப்படுத்த வேண்டும். எமது இயக்கத்தில் போராட்ட இலட்சியத்தை எடுத்து விளக்க வேண்டும். ஆகவே, முதற் சந்திப்பிற்கு என்னைப் போகுமாறு பிரபாகரன் பணித்தார். எம்.ஜி.ஆர் வற்புறுத்தினால் பின்பு தாம் அவரைச் சந்திக்கலாம் என்று பிரபாகரன் முடிவு எடுத்தார்.

எனது தலைமையில் ஒரு குழுவாகச் சென்று அன்று மாலை முதலமைச்சரைச் சந்திப்பதென்று முடிவாயிற்று. என்னுடன் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன்),சமீபத்தில் வீரச்சாவு எய்து விட்ட கேணல் சங்கர், அன்று "விடுதலைப்புலிகள் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.மு.நித்தியானந்தன் ஆகியோர் அன்று மாலை முதலமைச்சர் எம்.ஜி.ஆரை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட எம்.ஜி.ஆர் எம்மை அன்புடனும், பண்புடனும் வரவேற்றார். முதலில் நாம் எம்மை அறிமுகம் செய்து கொண்டோம். "உங்கள் தலைவர் பிரபாகரன் வரவில்லையா? அவரைச் சந்திக்க நான் ஆவலாக இருப்பதாகச் சொல்லுங்கள்" என்றார். "அவர் சென்னைக்கு வெளியே ஒரு பயிற்சிப் பாசறைக்கு அவசர அலுவலாக சென்றிருக்கின்றார். அடுத்த தடவை நிச்சியமாக அவரை அழைத்து வருவோம்" என்றேன்.

"கலைஞர் கருணாநிதியின் அழைப்பை நீங்கள் ஏன் ஏற்கவில்லை? அவரை எதற்காகச் சந்திக்க மறுத்தீர்கள்?" என்று ஒரு சங்கடமான கேள்வியை எழுப்பினார் எம்.ஜி.ஆர். "ஈழ விடுதலை அமைப்புக்கள் ஒன்றுபட வேண்டும், ஈழ விடுதலைப் போராட்டம் வலுப்பட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் நீங்கள் தான் முதலில் ஈழ விடுதலை அமைப்புக்களுக்கு அழைப்பை விடுத்தீர்கள். இன்றைய நாளைச் சந்திக்கும் தினமாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் கலைஞர் கருணாநிதி வீம்புக்காக தானும் ஒரு அழைப்பை விடுத்து ஒரு நாள் முன்கூட்டியே ஈழ விடுதலை அமைப்புக்களைச் சந்திக்க விரும்பினார்.

கலைஞர் விடுத்த அழைப்பு ஒற்றுமை முயற்சியைக் நோக்காக கொண்டதன்றே. அவர் உங்களுடன் போட்டி போட்டு அரசியல் இலாபம் தேட முயற்சித்தார். அதனால்தான் நாங் கள் அவரது அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை" என்று விளக்கினேன். முதல்வரின் முகம் மலர்ந்தது. "நீங்கள் தமிழ் நாட்டு அரசியலை நன்கு புரிந்து வைத்திருக்கின்றீர்கள்" என்று சொல்லி விட்டுச் சிரித்தார்.

"ஈழ விடுதலைப் போராளிகள் ஐந்து அமைப்புக்களாக ஏன் பிளவு பட்டு நிற்க வேண்டும். ஒரே அணியில் ஒன்று சேர முடியாதா? என்று கேட்டார் எம்.ஜி.ஆர். "ஒற்றுமைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஒரு உறுதியான, தெளிவான இலட்சியத்தின் அடிப்படையில்தான் போராளி அமைப்புக்கள் ஒன்று சேர முடியும். ஆனால் விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் மத்தியில் கருத்து வேறுபாடு நிறைய உண்டு. நடத்தையிலும் வேறுபாடு உண்டு. விடுதலைப்புலிகள் தனித்துவமானவர்கள். தனித்துவப் பண்பியல்பு கொண்டவர்கள்.

ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு போன்ற உயரிய பண்புகளை இறுக்கமாகப் பேணுபவர்கள். சாவுக்கு துணிந்தவர்கள். எதிரியின் கையில் உயிருடன் சிக்காதிருக்க நஞ்சுக் குப்பிகளை அணிந்திருப்பவர்கள். தமிழீழத் தாயக விடுதலை என்ற இலட்சியத்திற்காக தமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாரானவர்கள். இந்த அற்புதமான பண்புகளும் இலட்சிய உறுதிப்பாடும் ஏனைய அமைப்பினரிடம் காணமுடியாது" என்று விளக்கினோம். மௌனமாக ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர்.

விடுதலைப் புலி வீரர்கள் கடைப்பிடிக்கும் பண்பியல்புகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன. உமாமகேஸ்வரனைப் பற்றிக் கேட்டார். "அவரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராமே? தனது இயக்கம் தான் உண்மையான புலி இயக்கம் என்று சொலித் திரிகிறாராம். பிரபாகரனுக்கும் அவருக்கும் என்ன பிரச்சினை?" என்று கேட்டார்.

" போராளி அமைப்புக்களைச் சேர்ந்த அனைவரையுமே ஈழத்துப் புலிகள் என்று தமிழ் நாட்டு மக்கள் அழைப்பது வழக்காமாகி விட்டது. இந்தக் குழப்பத்தால் மற்றைய அமைப்புக்கள் புரியும் பாவம், பழி எல்லாமே புலிகள் இயக்கம் மீது விழுந்து விடுகின்றது. உமாமகேஸ்வரனும் ஒரு காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்தவர். இயக்கத்தின் ஒழுக்க விதிகளை மீறி ஒரு பெண்ணுடன் தகாத உறவு

**கலாநிதி:—**
**அன்ரன் பாலசிங்கம்**

கொண்டதால் அவர் அமைப்பிலிருந்து விலக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் புளொட் என்ற புதிய அமைப்பை உருவாக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றார்.புலிகளின் தலைமையை அழிக்கவும் முயற்சி செய்து வருகின்றார். அவர் ஒரு கொடிய மனிதர், தமிழ் நாட்டிலுள்ள அவரது பயிற்சி முகாம்களில் கொடுமைகள் நிகழ்வதாகச் சொல்லப்படுகின்றது. அவை வதை முகாம்களாக மாற்றப்பட்டிருக்கின்றனவாம். பல அப்பாவி இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு ஆளாகிக் கொல்லப்பட்டிருப்பதாக நம்பகமான தகவல்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றது" என்று கூறினேன்.

"அப்படியான பேர்வழியா? எனக்கு அவர் பற்றி விபரமாகத் தெரியாது. அவரை நாளை சந்திப்பதாக நேரம் ஒதுக்கியிருக்கின்றேன். அதை இரத்துச் செய்ய வேண்டும். இப்படியான பேர்வழியுடன் எந்த உறவும் வைக்கக் கூடாது" என்றார்.

"விடுதலைப்புலிகளின் கொள்கை என்ன? அரசியல் சித்தாந்தம் என்ன? விடுதலைப்புலிகள் கம்யூனிசத் தீவிரவாதிகள் என்று எனது அமைச்சர் ஒருவர் சொல்கிறாரே, அது உண்மையா?" என்று கேட்டார் எம்.ஜி. ஆர்.

"விடுதலைப்புலிகள் கம்யூனிஸ்டுகள் அல்லர். விடுதலைப்புலிகள் புரட்சிவாதிகள். சுதந்திரப் போராளிகள். தமது தாயகமாக தமிழீழத்தின் சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள். சாதியக் கொடுமை, பெண் அடிமைத்தனம், மற்றும் சமூக முரண்பாடுகள் நீங்கி சமத்துவமும், சமூக நியதியும் நிலவும் ஒரு உன்னதமான, சுதந்திரமான சமுதாயத்தைப் படைக்கவே நாம் போராடுகிறோம்.

இப்படியான எமது புரட்சிக் கொள்கையைப் புரிந்து கொள்ளாமல் எம்மைக் கம்யூனிசத் தீவிரவாதிகளென சிலர் தவறாகக் கருதக்கூடும். ஏழைகளின் சுபீட்சத்திற்காகவும் ஒடுக்கப்படும் மக்களின் விடிவுக்காக வும் நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகின்றோம். இரத்தம் சிந்தி, உயிரை அர்ப்பணித்துப் போராடுகின்றோம். எமது

**"உமாமகேஸ்வரனும் ஒரு காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்தவர். இயக்கத்தின் ஒழுக்க விதிகளை மீறி ஒரு பெண்ணுடன் தகாத உறவு கொண்டதால் அவர் அமைப்பிலிருந்து விலக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் "புளொட்" என்ற புதிய அமைப்பை உருவாக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றார்."**

இந்த இலட்சிய உறுதியை தீவிரவாதம் என்று சொல்ல முடியாது. விடுதலை வேட்கை என்று சொல்வதே பொருந்தும்." என்று விளக்கினேன்.விடுதலைப் புலிகளின் கொள்கையையும், சித்தாந்தத்தையும் விபரிக்கும் போது கடினமான, சிக் கலான சொற்பிரயோகங்கள், கோட்பாடுகளைத் தவிர்த்து மிகவும எளிமையாக அவர் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் விளக்க முயன்றேன்.

"ஏழைகளின் நண்பனாக, தொழிலாளர்களின் தோழனாக, நசுக்கப்படும் மக்களின் நாயகனாக நீங்கள் திரையுலகில் நடித்து தமிழ் நாட்டில் சமூக விழிப்புணர்வைத் தட்டியெழுப்பவில்லையா? இதனால் தமிழ் மக்களில் இதயங்களில் ஒரு நிரந்த இடத்தைப் பிடிக்கவில்லையா? இன்னும் தமிழகத்தில் முதல்வராக உயர் பதவி வகிக்கும் நீங்கள் ஏழைகளின் துயர் துடைக்கத் தொண்டாற்றவில்லையா? நீங்கள் சினிமா உலகில் சாதித்ததை விடுதலைப்புலிகள் நிஜவுலகின் சாதிக்கின்றார்கள். உங்களுக்கும், புலிகளுக்கும் இலட்சியம் ஒன்றுதானே?" கொள்கையளவில்




நோக்கினால் உங்களையும் பிரபாகரனையும் சமூகப் புரட்சி வாதிகள் என்றுதான் சொல்லவேண்டும்" என்று விளக்கினேன். அவர் புன்முறுவலுடன் தலையை அசைத்த போது நான் கொடுத்த விளக்கம் அவருக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது என்பது தெளிவாகியது.

அடுத்ததாக சிங்கள அரச பயங்கரவாதத்தின் கொடுமைகளையும் ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் தாங்கொணாத் துன்பங்களையும் எடுத்துக் கூறினேன். சிங்கள ஆயுதப் படைகள் தமிழர் தாயகத்தில் நிகழ்த்திய படுகொலைகளை விபரித்துக் கூறிய திரு.பேபி சுப்பிரமணியம் அந்தக் கொடூரக் காட்சிகளை சித்தரிக்கும் புகைப்படங்களை எம்.ஜி.ஆரிடம் காண்பித்தார். அந்தக் கொலைக் காட்சிகளைப் படங்களில் பார்த்ததுமே அவரது முகம் விகாரமடைந்தது. "இதைப் பார்க்க முடியவில்லையே இப்படியெல்லாம் கொடுமை செய்வார்களா?" என்று கவலையுடனும், ஆச்சரியத்துடனும் கேட்டார்.

"ஈழத்தில் இனக் கொலை நடக்கின்றது எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டு வருகின்றார்கள் இந்தத் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களையும் மண்ணையும் மீட்கவேநாம் ஆயுதமேந்திப் போராடுகின்றோம்." என்று விளக்கினேன்."இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை இந்திய அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்கின்றதா? ஈழத்துப் போராளிகளுக்கு ஏதோ இரகசியமான உதவி செய்வதாகக் கேள்விப்பட்டேன். இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் பணமும் கொடுப்பதாகச் சொல்லுறாங்க. உண்மையா?" என்று கேட்டார் முதலமைச்சர்.

"மிகவும் சிறியளவில் உதவி புரிகிறார்கள். யானைப் பசிக்கு சோளம் பொரி போட்ட மாதிரி. எமது அமைப்பைச் சேர்ந்த 200 போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். சிறிய தொகையில் பழைய துருப்பிடித்த ஆயுதங்களும் தந்திருக்கிறார்கள். இவற்றில் பல பாவனைக்கு உகந்தன அல்ல என்று எமது தளபதிகள் சொல்கிறார்கள்.

தமிழீழ மக்களின் அரசியல் விடுதலைக்காக இந்திய அரசு எமக்கு உதவி புரியவில்லை தனது பூகோள-அரசியல் நலனுக்காகவே எமக்கு உதவி புரிகின்றது. அதாவது மேற்குலக அரசியல் -இராணுவ வலைக்குள் சிக்குண்டு நிற்கும் இலங்கை அரசை தனது ஆதிக்க வியூகத்திலுள் கொண்டு வருவதற்கே இந்தியா முயல்கிறது.இந்த நோக்கை அடைவதற்காகவே ஈழத்துப் போராளிகளை இந்தியா பகடைக் காய்களாகப் பாவிக்கின்றது. இந்த இராணுவப் பயிற்சித் திட்டத்திலும் பாகுபாடு காட்டப்படுகின்றது.

ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளுக்கு இராணுவப் பயிற்சி மறுக்கப்பட்டது. ஆயினும் இந்திரா காந்தி அம்மையாரின் தலையீட்டின் பின்னரே இந்தப் பயிற்சித்திட்டத்தில் நாம் இணைக்கப்பட்டோம். அப்படியிருந்தும் எம்மை விட மற்றைய அமைப்புக்களுக்கே கூடுதலாகப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்குப் பணமும் வழங்கப்படுகின்றது. எமக்கு நிதியுதவி எதுவும் வழங்கப்படவிலலை என்று சொன்னேன்.என்ன காரணத்திற்காக இப்படி பாரபட்சம் காட்டுகிறார்கள்.? என்று கேட்டார் எம்.ஜி.ஆர். "நாம் தனித்துவமான போக் குடையவர் என்பது இந்திய அரசுக்குத் தெரியும். அத்தோடு வரித்துக் கொண்ட இலட்சியத்தில் நாம் உறுதியாக நிற்போம் என்பதை அவர்களுக்குத் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலான இந்தியாவின் இரகசியத் திட்டங்களுக்கு இசைந்து போய் வளைந்து கொடுக்க மாட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏனைய அமைப்புக்கள் அப்படியல்ல.

அவர்களுக்கு உறுதியான இலட்சியம் எதுவுமில்லை. இந்திய அரசின் அழுத்தங்களுக்கு அவர்கள் பணிந்து சென்று வளைந்து கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள். இதன் காரணமாகவே ஏனைய போராளி அமைப்புக்களை இராணுவ ரீதியாக பலப்படுத்தி விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்த இந்திய அரசு முனைகிறது. என்று விளக்கினேன். எல்லாவற்றையும் மிக உன்னிப்பாகவும் பொறுமையாகவும் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர், "எல்லாம் எமக்குப் புரிகிறது. இப்பொழுதுநான் என்ன செய்ய வேண்டும்? எத்த கைய உதவியை என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்கள்," என்று கேட்டார்.

"எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் கைகொடுத்து உதவ வேண்டும். இந்திய அரசு ஒழுங்கு செய்த பயிற்சி அறவே போதாது இந்தியப் பயிற்சி பெற்ற இருநூறு போராளிகளுடன் சிங்கள இராணுவத்தை சமாளிப்பது மிகவும் கடினம். நாம் தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை அமைத்து எமது போராளிகளுக்கு நாமே பயிற்சி கொடுக்கத் திட்டமிட்டிருக்கின்றோம். குறைந்தது ஆயிரம் போராளிகளுக்கு இராணுவப் பயிற்சியளித்து அவர்களுக்கு ஆயுதம் தரிக்க விரும்புகின்றோம்.

(தொடரும்......)




## பக்தாத் விமான விபத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ் படையினர் பரிதாப மரணம்.

(ராய்ட்டர்)

பக்தாத் வட மேற்குப் பிரதேசத்தில் இடம்பெற்ற விமானப் படைக்குச் சொந்தமான விமான விபத்தில் பிரிட்டிஷ் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளதாக பிரதமர் டொனி பிளேயர் தெரிவித்துள்ளார். இந்த விபத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என பிளேயர் குறிப்பிடாத போதிலும் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் துருப்புக்கள் பலியாகியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

இவ் விபத்துக்கான காரணம் வெளியிடப்படாத நிலையில் விமானத்தின் சிதைவுகள் திறந்த வெளியொன்றில் கிடப்பதை கெலிக்கொப்டர்கள் மூலம் அறிய முடிந்ததாக அமெரிக்க அதிகாரிகள்கூறினர்.

விபத்துக்குள்ளான விமானத்தில் 92 படையினரும், 64 சராத் உறுப்பினரும், பயணிக்க முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் நடைபெற்ற நேற்று முன்தினம் பக்தாத்தில் இருந்து. மலாக் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இந்த விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதே வேளை ஈராக்கின் பல்வேறு பகுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 30பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

## காசா திட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு போராட்டம்

(ராய்ட்டர்)

இஸ்ரேல் பிரதமரின் காசாத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தியிருக்கின்றனர். காசா நிலப்பரப்பு மற்றும், மேற்கு கரையோர யூதக் குடியிருப்புக்களை வெளியேற்றுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் இது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனவும் நிபந்தனை விதித்துள்ளனர்.

இஸ்ரேல் பாராளுமன்றத்துக்கு முன்னர் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட போது கெலிக்கொப்டர் ஒன்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதுடன், கறோனின் அலுவலகத்தைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. யூதர்கள் வெளியேற்றப்படுவது இனி மேலும் இடம் பெறக்கூடாது என்று சுலோகங்களை ஏந்தியிருந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் யூதர்களுக்கு செறோன் தீயவர் என்றும் இவர்கள் முடிவு செய்து விட்டனர் என்னும் கோசங்களையும் தாங்கியிருந்தனர்.



மலரை நாடிய தேனீ: கேரள மாநிலம், மூணாறு பிளாசம் இண்டர்நேஷனல் பூங்காவில் வண்ணப்பூக்கள் ஏராளமாக பூத்துக் குலுங்குகின்றன. இங்கு பூத்துள்ள காலிபோர்னியா பாப்பி இன பூக்கள் பயணிகளை மட்டுமல்ல, தேனீக்களையும் ஈர்த்துள்ளன. மூணாறு பிளாசம் பூங்காவில் பூத்துக் குலுங்கும் கோரியப்ஸ் இனப் பூக்கள்.

## மலாவில் ஆளும் ஐக்கிய முன்னணி ஜனாதிபதியை கட்சியிலிருந்து நீக்கியுள்ளது.

(ராய்ட்டர்)

மலாவில் ஆளும் ஐக்கிய முன்னணி அந்த நாட்டு ஜனாதிபதியை கட்சியிலிருந்து நீக்கியுள்ளது.

கட்சியின் கட்டுக்கோப்புக்களை மீறியதற்காக ஜனாதிபதி ஜிங்குவா முத்தாறுகாவை கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக மலாவின் உள் விவகார அமைச்சர் உலாதீன் முசா கூறியுள்ளார்.


ஜனாதிபதி முத்தாரிக்காவை கட்சியிலிருந்து நீக்குவதற்கு கட்சித் தலைவர் ஏற்கனவே தீர்மானித்து விட்டதாகவும் இது பற்றி கலந்துரையாடல் நிறைவேற்றுக் குழு மறுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டமைதொடர்பாக சம்பிரதாய முறையில் தெரிவிக்கவே நிறைவேற்றுக் குழுகூடியிருப்பதாக அவர் மேலும் கூறினார். கட்சியிலிருந்து ஜனாதிபதி நீக்கப்பட்டமை தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயமறுப்புத் தெரிவிக்கப்பட்டதால் கூட்டத்திலிருந்து வெளி நடப்பு செய்யப்பட்டதாக அவர் கூறினார். ஜனாதிபதியின் நற்குணங்களையும் ஆராய்வது அவசியமெனவும் அவர் குறிப்பிட்டார்.

## நடிகர் சங்கத் தலைவராக மீண்டும் விஜயகாந் தெரிவு

(சென்னை)

நடிகர் சங்கத் தலைவராக மீண்டும் விஜயகாந் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தல் சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. தேர்தலில் தலைவர் பதவிக்கு விஜயகாந்தும், அவரை எதிர்த்து நடிகை தேவியும் போட்டியிட்டனர். இதில் விஜயகாந் வெற்றி பெற்று மீண்டும் தலைவரானார். பொதுச் செயலாளர் பதவிக்கு நடிகர் சரத்குமார் போட்டியிட்டார். இவரை எதிர்த்து ராஜா போட்டியிட்டார். இதில் மீண்டும் சரத்குமார் வெற்றி பெற்றார். துணைத்தலைவர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு மேலும் தொடர்ந்தது. மற்ற நிர்வாகிகளின் வெற்றி அறிவிப்பு இன்று வெளியாகும்.



## குவைத் பிரஜைகள் மத்திய கிழக்கில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

### -குவைத் அறிப்பு.-

(ராய்ட்டர்)

மத்திய கிழக்கில் வசிக்கும் குவைத் பிரஜைகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று குவைத் அரசாங்கம் எச்சரித்துள்ளது. இதே வேளை அமெரிக்காவும் அதன் பிரஜைகளுக்கு இவ்வாறே எச்சரிக்கை விடுத்துள்ளது.

அல் கைதா அமைப்பினரின் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்றும் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை குவைத்தில் வசிக்கும் பிரிட்டன், மற்றும் பிரான்ஸ் மக்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அண்மையில் இடம் பெற்ற நேரடி மோதல் சம்பவமொன்றில் பாதுகாப்பு பிரிவினர் இருவரும் தீவிரவாதிகள் இருவரும் கொல்லப்பட்டதையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

## ஈராக்கிய தேர்தல் வெற்றிகரமாக இடம் பெற்றதாக அரசாங்கம் அறிவிப்பு.

(ராய்ட்டர்)

ஈராக்கிய பொதுத் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதாக கூறப்படுகின்றது. ஈராக்கிய தேர்தலை புறக்கணிக்குமாறு ஈராக்கிய போராளிகள் கோரிக்கை விடுத்திருந்ததோடு பல்வேறு வன்முறைகளிலும் ஈடுபட்டார்கள் இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஈராக்கிய தேர்தல் வாக்களிப்பு வெற்றிகரமாகஇடம்பெற்றிருப்பதாக ஈராக்கின் இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

தேர்தல் தினமான நேற்று முன்தினம் ஈராக்கில் இடம் பெற்ற தாக்குதலில் 36 பேர் பலியாகியுள்ளனர். ஈராக்கிய மக்களின் தேர்தல் பங்களிப்புக்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி புஷ் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தேர்தல் நிறைவுற்ற பின்னரும் அமெரிக்கப் படைகள் ஈராக்கில் தொடர்ந்தும் நிலைத்திருக்குமென்றும் புஷ் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தோனேசிய ஆச்சே மாநிலத்தை கட்டியெழுப்ப தீவிரவாதிகளுடன் பேச்சு

(ராய்ட்டர்)

இந்தோனேசியாவில் கடற் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட ஆச்சே மாநிலத்தைக் கட்டியெழுப்புவதற்கானஇடைக்காலத் திட்டம் குறித்து அந்த நாட்டின் பிரிவினவாதத் தீவிரவாதிகளோ அரசாங்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற இருப்பதால் இவர்களை மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தான் கோரப் போவதாகவும் பின்லாந்தின்முன்னாள் பிரதமர் தெரிவித்தார். 2 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக இந்தோனேசிய பிரிவினவாதிகளோடு அந்த நாட்டு அரச பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள். இதன் போது ஆச்சே மாநிலத்தில் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தியாகராஜர் ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனைகள் நேற்று முன்தினம் காலை நடந்தது. ஒரே மேடையில் நூற்றுக்கணக்கான இசைக்கலைஞர்கள் அமர்ந்து இசையஞ்சலி செலுத்தினர்.

## அமெரிக்காவில் பனிக்கட்டி சண்டை போட்டியில் புதிய சாதனை படைப்பு

(ராய்ட்டர்)

அமெரிக்காவில் பனிக் கட்டிகளை வீசியெறிந்து சண்டையிடும் சுவாரஸ்யமான போட்டி மூலமாக அங்கு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கின்னஸ் சாதனைக்காக இந்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் கின்னஸ் சாதனை நிறுவனத்தின் அங்கீகாரம் இன்னமும் கிடைக்கவில்லை.

அமெரிக்காவின் இலியோனஸ் மாநிலத்தில் நடைபெற்ற இந்தப் போட்டி பலரையும் கவர்ந்துள்ளது. சுமார் 3000 பேர் இந்த போட்டியில் பங்கு பற்றினார்கள். தனித் தனிக் குழுக்களாக பிரிக்கப்பட்ட போட்டியாளர்கள் ஒருவர் மீது ஒருவர் பனிக்கட்டிகளை வீசியெறிந்தார்கள். தகுந்த பாதுகாப்புக் கவசங்களோடு இந்தப் போட்டியில் பங்கேற்றவர்கள் உற்சாகமாகவும், ஆர்வத்தோடும் பனிக்கட்டிகளை வீசியெறிந்து மகிழ்ந்தார்கள், கடந்த ஆண்டு நியூசிலாந்தில் 2470 பேர் பங்கேற்ற பனிக்கட்டிச் சண்டையிடும் போட்டி படைத்த கின்னஸ் சாதனையினை இந்த போட்டி முறியடித்துள்ளது. எனினும் இந்தப் போட்டிக்கு கின்னஸ் உலக சாதனை நிறுவனம் அங்கீகாரம் வழங்கவில்லை.

## இந்தியா, பாகிஸ்தான் உறவுகளை மேம்படுத்த கூட்டுத் திட்ட யோசனை.

(ராய்ட்டர்)

இந்தியாவுடன் நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டுத் திட்ட யோசனைகளை பாகிஸ்தான் பிரதமர் செக்தான் அஸீஸ் முன்வைக்கவுள்ளார். இதன் மூலம் மிகவும் பிரச்சினைக்குரிய காஷ்மீர் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய ஆக்கபூர்வமான முடிவுகளுக்கும் முன்னேற்றங்களுக்கும் வித்திட முடியுமென பாகிஸ்தான் கூறுகின்றது.

பாகிஸ்தானூடாக இந்தியாவிற்கும், ஈரானுக்குமிடையில் வாயுக்குழாய் இணைப்பும் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையே வங்கித் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற விடயங்கள் ஒரு சிறந்த சூழலை உருவாக்க வழிவகுக்குமென்று பாகிஸ்தான் பிரதமர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்தும் பொருட்டு இன்னும் பல விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பலஸ்தீன ஜனாதிபதி ரஷ்ய ஜனாதிபதியை நேற்று சந்தித்தார்.

(ராய்ட்டர்)

பலஸ்தீனத்தின் புதிய ஜனாதிபதி முகமட் அபாஸ் ரஷ்யாவின் ஜனாதிபதி பிலாடிமெல் புட்டினுடன் நேற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தையினை நடாத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு சமாதான முயற்சிக்கு புத்தாக்கம் கொடுப்பதற்கான சர்வதேச ஆவணங்களைத் திரட்டும் அவரின் முதலாவது முயற்சியாக ரஷ்ய விஜயம் அமைகின்றது.

ரஷ்யாவில் கல்வி கற்று ரஷ்ய மொழியில் நன்கு பரீட்சயமுள்ள முகமட் அபாஸ் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்கு இந்த விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது என்று கூறினார்.

இதே வேளை இஸ்ரேலுக்கு எதிரான அழுத்தங்களைக் கொடுக்கும் பொருட்டு உலக நாடுகள் தன்னோடு இணையும் என நம்புவதாக அபாஸ் தெரிவித்தார்.

# சம்பியன் பட்டம் வென்றார் சபின் சாதிக்கத் தவறினார் ஹெவிட்

(மெல்போர்ன்)

மாரட்சபின் முதன் முறையாக அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். சொந்த மண்ணில் களமிறங்கிய



லேடன் ஹெவிட் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்து சாதிக்கத் தவறினார். 2005ம் ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. நூற்றாண்டு விழா காணும் இத்தொடரில் கடைசி கட்டமாக ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி மெல்போர்னில் நேற்று நடந்தது.


மூன்றாம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட், நான்காவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் மாரட்சபினை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்களும் இதுவரை அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டத்தை வென்றதில்லை. இதனால் முதன் முறையாகப் பட்டத்தை கைப்பற்றும் நோக்கத்துடன் களமிறங்கினார்.

முதல் செட்டில் ஹெவிட் ஆட்டம் அபாரமாக இருந்தது. மூன்றாவது கேமில் இவர், சபின் சர்வீசை 'பிரேக் செய்து முன்னிலை பெற்றார். பின்னர் சுதாரித்து ஆடிய சபின் இரண்டாவது செட்டை கைப்பற்றினார். மீண்டும் மூன்றாவது செட்டில் ஹெவிட் ஆதிக்கம் மேலோங்கியது. துவக்கத்திலே இவர் சபின் சர்வீசை பிரேக் செய்து 3க்கு0 என்ற கேம் கணக்கில் முன்னிலை பெற்றார். இந்நிலையில் சபின் தனது முழு திறமையையும் வெளிப்படுத்தத் துவங்கினார்.

சபின் வெற்றி: இவரது விரைவான அடிகளில் திணறிப் போனார் ஹெவிட். இதனால் மூன்றாவது செட்டை 6க்கு4 என்ற கேம் முன்னிலையில் வெற்றி பெற்ற இவர், நான்காவது செட்டையும் கைப்பற்றினார். 2 மணி நேரம் 45 நிமிடங்கள் நடந்த இப்போட்டியில் சபின் 1க்கு6, 6க்கு3, 6க்கு4, 6க்கு4 என்ற செட்களில் ஹெவிட்டை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

சபின் கைப்பற்றும் இரண்டாவது கிராண்ட் ஸ்லாம் பட்டம் இது. இதற்கு முன் 2000ல் இவர் யு. எஸ். , ஓபன் தொடரில் அமெரிக்காவின் பீட் சாம்பிராசை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளார். 2002, 2004 இரண்டு முறை அவுஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்த இவர், இம்முறை பெரும் போராட்டத்திற்குப் பின் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

தவறியது சாதனை: சொந்த மண்ணில் களமிறங்கிய ஹெ



விட், தோல்வி அடைந்ததன் மூலம் சாதனை படைக்கத் தவறினார். இத் தொடரில் அவுஸ்திரேலிய வீரர் ஒருவர் சம்பியன் பட்டம் வென்று 29 ஆண்டுகள் ஆகிறது. 1976ல் மார்க் எட்மான்ட்சன் கடைசியாக சம்பியன் ஆனார். இந்த சாதனையை முறியடிக்கும் வாய்ப்பைக் கடைசிக் கட்டத்தில் நழுவ விட்டார் ஹெவிட்.

# ஹர்பஜன்சிங் பந்து வீச்சில் ஆய்வு

ஹர்பஜன்சிங் பந்து வீச்சை ஆய்வு செய்யும் குழுவில் அவுஸ்திரேலிய 'பயோரூமெக்கானிக்' நிபுணர் புருஸ் எல்லாட் இடம் பெறுகிறார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தலைமை நிர்வாகிகள் கூட்டம் அடுத்தமாதம் 2 முதல் 5ம் திகதி வரை மெல்போர்ன் நகரில் நடக்கிறது. இந்திய கிரிக்கெட் சபை சார்பில், அதன் செயலாளர் நாயர் கூட்டத்தில் பங்கேற்கிறார். இதுபற்றி நாயர் திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் அளித்த பேட்டி.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி தரவரிசையில் முதலிடம் பிடித்த அணிக்கும், உலக லெவன் அணிக்கும் இடையிலான 'சூப்பர் சீரிஸ்' தொடரை ஐ.சி.சி. நடத்துகிறது.





# அப்துல் ரசாக்கின் அபார ஆட்டத்தில் பாகிஸ்தான் அணிக்கு வெற்றி

முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் அப்துல் ரசாக் அபாரமாக ஆட, பாகிஸ்தான் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவு அணிகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெட் தொடர் நடக்கிறது. பெர்த் நகரில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பெடுத்தாடியது.

ஹைடன் (6) மோசமான ஆட்டம் இம்முறையும் தொடர்ந்தது. கில்கிறிஸ்ட் (47) விரைவாக ஓட்டங்களை விளாசினார். இதன் பின் வந்தவர்கள் சீரான இடைவெளியில் வெளியேற அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் இழப்புக்கு 192 ஓட்டங்கள் என்ற இக்கட்டான நிலையை அடைந்தது. இளம் வீரர் மைக்கேல் கிளார்க் பொறுப்புடன் ஆடி மீண்டும் ஒருமுறை அணிக்கு கைகொடுத்தார்.

ஒருமுனையில் பிரட்லீயை நிறுத்திக் கொண்டு வேகமாக ஓட்டம் சேர்த்தார் கிளார்க். இதனால் 50 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 265ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கிளார்க்75 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.



பாகிஸ்தான் தரப்பில் சிறப்பாகப் பந்துவீசிய அப்துல் ரசாக் 4 விக்கெட் கைப்பற்றினார். அடுத்து களமிறங்கி பாகிஸ்தான் துவக்கத்தில் 3 விக்கெட்டுகளை இழந்தது. சோயப் மாலிக் (1) சைமண்ட்ஸ் செய்த அபார ஓட்டமிழந்தார். யூசப் யோகனா (72) பொறுப்புடன் ஆடி அணிக்கு கைகொடுத்தார்.

இவர் வெளியேற பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்களுடன் இருந்தது. இந்நிலையில் அப்ரிதி விளாசல் ஆட்டம் ஆடினார். இவர் 13 பந்துகளில் 30 ஓட்டம் குவிக்க பாகிஸ்தான் அணிக்கு வெற்றி வாய்ப்பு கிடைத்தது.

# உடுதுணிகள் தேவையாயின் சக்தி இல்லத்துடன் தொடர்பு கொள்ளவும்

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடுதுணிகள் தேவையாயின் களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள சக்தி நலன்புரி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இல்லத் தலைவர் சி. யோகேஸ்வரன் கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டு தமது உடமைகளை, உறவுகளை இழந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு உடுதுணிகள் தேவையாயின் மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள சக்தி நலன்புரி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் கேட்கப்படுகின்றது.

இம்மக்களுக்கு உடுதுணிகளை வழங்க விரும்பும் பொது அமைப்புக்களோ, அல்லது நலன்விரும்பிகளோ இவ்வில்லத்துடன் தொடர்பு கொண்டு இதனை வழங்க முடியும் எனவும் இல்லத் தலைவர் மேலும் கேட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு களுவாஞ்சிகுடி சக்தி நலன்புரி நிலையம் பல்வேறு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கேஹனியைக் காணவில்லை கண்டவர்கள் அறியத் தரவும்



அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் கல்முனை-2 வட்டவிதானை வீதியைச் சேர்ந்த ஜெயராசா கேஹனி வயது 6 எனும் சிறுமி காணாமல் போயுள்ளதாக அவரது தந்தை தெரிவித்துள்ளார். கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி கல்முனை மாமாங்க வித்தியாலயத்தில் அறநெறி வகுப்புக்காகச் சென்றவேளை காணாமல் போயுள்ளார்.

எனவே இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் எஸ்.ஜெயராசா, வட்டைவிதானை வீதி, கல்முனை-02 எனும் முகவரியுடனோ அல்லது 0777295106, அல்லது 067 2220260 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கின்றனர்.

# தாய், தந்தையை இழந்தோரை தத்தெடுக்கும் கதிரொளி இல்லம்

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையரை இழந்த சிறார்களைத் தத்தெடுக்க கொக்கட்டிச்சோலை கதிரொளி இல்லம் முன்வந்துள்ளது.

மிக நீண்டகாலமாக அநாதரவான நிலையில் உள்ள சிறார்களை இனம் கண்டு அவர்களைத் தத்தெடுத்து பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுவரும் கொக்கட்டிச்சோலை கதிரொளி இல்லம் அண்மையில் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலையால் தமது தாய், தந்தையரை இழந்த சிறார்களை இலங்கையில் எப்பாகத்திலிருந்தாலும் அவர்களைத் தத்தெடுத்து பராமரிக்க முன்வந்துள்ளது.

எனவே இவ்வாறான சிறுவர்களை வைத்திருக்கும் உறவினர்கள் அல்லது பாதுகாவலர்கள் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ள கதிரொளி இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை இந்து சேவா சங்கம் உதவி

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு இலங்கை இந்து சேவா சங்கத்தினர் பல்வேறு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் பட்டிருப்புப் பகுதியில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அரிசி, தண்ணீர்ப் போத்தல்கள், விஸ்கட் வகைகள், கோதுமை மா, சவர்க்காரம், மருந்து வகைகள், சமையல் பாத்திரங்கள், உடுதுணி வகைகள் என்பனவற்றை வழங்கியுள்ளனர்.

அத்துடன் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள சிறார்களுக்கு உளநலத்தினை ஏற்படுத்தும் முகமாக ஆன்மீகக் கருத்துரைகள், வீரதீரக் கதைகள் என்பவற்றையும் கூறி வருகின்றனர்.




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள எமது துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது.

நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் முடிந்தவரை அவற்றை வெளிக்கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்.

# பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு மருதமுனை தௌஹீத் ஜமாஅத் அமைப்பு நிதியுதவி

(பி.எம்.எம்.ஏ.காதர்)

"சுனாமி" கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த 60 அனாதைப் பிள்ளைகளுக்கு மருதமுனை தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டில் ஒரு பிள்ளைக்கு மாதமொன்றுக்கு ரூபா 1000 வீதம் தொடர்ச்சியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்முதல் கட்டமாக நேற்று முன்தினம் 60 சிறார்களுக்கு ரூபா 1000 வீதம் பணம் வழங்கப்பட்டது. இதற்கான நிதியை ஜம்இய்யத்துஸ்ஸபாப் வழங்கியதாக மருதமுனை தௌஹீத் ஜமா அத் அமைப்பின் முக்கியஸ்தர் மௌலவி எம்.எல்.எம்.முபாறக்ஸலபி தெரிவித்தார்.

இதேவேளை "சுனாமி" கடல் அனர்த்தத்தால் கணவன்மாரை இழந்த விதவைகளுக்கும் நிதியுதவி வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும் மௌலவி முபாறக் மேலும் தெரிவித்தார்.

பொது ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், தனவந்தர்கள், எமது அமைப்புக்கு உதவுவதன் மூலம் விதவைகளுக்கும், அநாதைச் சிறுவர்களுக்கும் எந்தவித கஸ்டமும் ஏற்படாதவாறு உதவ முடியுமென மௌலவி முபாறக் தெரிவித்தார்.

## சிந்தனைக்கு



சொல்லுக்கு முன்னே எப் போதும் செயல் இருக்க வேண்டும். செயல்தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம். செயல்தான் நமது நட வடிக்கைகளுக்கு அரசியல் வடி வம் தருகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.

மின்னஞ்சல் :- batti@eezhanatham.com
தொலைபேசி :- 065-2226110
01-02-2005

# ஜே.வி.பி., சுதந்திர கட்சி உடையும் ஆபத்து

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையில் மீண்டும் பனிப்போர் தொடங்கி விட்டது.

எந்த நேரத்திலும் இந்த உடன்படிக்கை முறிவடையும் சாத்தியமிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி நடத்திய போது பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்க்கட்சியாக இருந்தது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு சதி முயற்சிகளை மேற்கொண்ட சிறிலங்கா சுதந்தரக் கட்சி ஜே.வி.பியின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை மேற்கொண்டது. இதில் பிரதான பாத்திரம் வகித்தவர்களில் ஜனாதிபதியின் சகோதரர் அனுரா பண்டார நாயக்கா, தற்போது நிதி அமைச்சராக இருக்கும் சரத் அமுனுகமவையும் குறிப்பிட்டுக்கூறலாம்.

சரத் அமுனுகம பொதுஜன ஐக்கியமுன்னணி ஆட்சிக் காலத்தில் அமைச்சரவைப் பேச்சாளராகச் செயற்பட்டவர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி. இணைவதை பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த பல இடதுசாரிக் கட்சிகள் விரும்பவில்லை.

அதே வேளை அமைச்சரவைப் பகிர்வு மற்றும் இலாகாக்களை பகிர்ந்து கொள்வது தொடர்பாக பல்வேறு மட்டங்களிலும் பேச்சுவார்தைகள் நடத்தப்பட்டு இணக்கம் காணப்பட்டது.

இதன் பலனாக கடந்த 20.01.2004 அன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி கூட்டு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டது.

இந்த உடன்படிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பேசிக் கொண்டனர். இவர்களது கூட்டு உடன்படிக்கையின் பயனாக உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை வீழ்த்துவதற்கான குழிப்பறிப்புக்களை மேற்கொண்டதுடன் மட்டுமல்லாமல் கடந்த தேர்தலிலும் போட்டியிட்டனர். இனவாதத்தை பிராதான ஆயுதமாக வைத்து களமிறங்கிய கட்சி எதிர்பாராத வெற்றி பெற்றது.

இனவாதத்தையே தேர்தல் விஞ்ஞாபனத்தில் புகுத்தி களமிறங்கி வெற்றிபெற்றதன் காரணமாகத் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் இழுபறிப்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

இதே வேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்ததும் கடுமையான நிபந்தனைகளை ஜனாதிபதிக்கு விதிக்கத் தொடங்கியது.

முதலாவது விடயம் பிரதமராக யாரை? நியமிப்பது ஜனாதிபதியவர்கள் தமது நம்பிக்கைக்குரிய கதிர்காமரை நியமிப்பதற்குத் திட்டமிட்டிருந்தார்.

தமிழரான கதிர்காமரை பிரதமராக்கும் பட்சத்தில் தமிழ் மக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சர்வதேச சமூகங்களின் காய் நகர்த்தல்களுக்குமுகம் கொடுப்பதற்கு வாய்ப்பாக அமையும் என அம்மணி கருதினார்.

ஆனால் ஜே.வி.பி கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்தது. தமிழர் ஒருவரை எந்த வகையிலும் பிரதமராக்க முடியாது என ஆட்சேபம் தெரிவித்ததுடன் மகிந்த ராஜபக்ஷ அவர்களையே பிரதமராக்குமாறும் வலியுறுத்தியது.

பிரதமர் விடயத்திற்குத் தீர்வு காணப்பட்டாலும் அதன் பின் அமைச்சர்களை பகிர்ந்து கொள்வதில் அதிகாரங்களைப் பகிர்வதிலும் பல்வேறு இழுபறிகள் பட்டு இறுதியில் ஜே.வி.பி கோரியது கிடைத்து விட்டது.

அதன் பிற்பாடு ஜே.வி.பியை ஓரம் கட்டும் பாணியிலான பல சம்பவங்கள் ஜனாதிபதியினால் நடந்துள்ளன. ஒவ்வொரு சம்பவத்திலும் பனிப்போர்.

ஜே.வி.பியின் உயர்மட்டத் தலைவர்கள் ஜனாதிபதி குறித்து மேடைகளில் விமர்சனம் செய்தனர். இறுதியில் கூட்டு முன்னணிக்கு ஆயுள் குறைவு என அரசியல் விமர்சகர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பகிர்வு விடயத்தில் ஜே.வி.பியை ஓரங்கட்ட ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டு இருதரப்புக்கும் இடையிலான உறவு விரிசலடைந்துள்ள நிலையில் எந்த நேரத்திலும் கூட்டுப் பிரியலாம் என நம்பப்படுகின்றது.

# காலங் காலமாக எமது மக்களின் உரிமைகளை அழிக்கின்ற வகையில் சிங்கள அரசு செயற்பட்டது.

## மட்டு அம்பாறை தளபதி ராம்



காலங் காலமாக எமது மக்களின் உரிமைகளைப் பறித்து போராட்டத்தையும், அழிக்கின்ற நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் சிங்கள பேரினவாத அரசு செயற்படுத்தி வந்துள்ளது என்பது அணைவருக்கும் தெரியும்.

தற்போது மட்டு-அம்பாறை மாவட்ட நிலைமை பற்றியும், அங்கு நிகழும் புனர்நிர்மான செயற்பாடுகள் பற்றியும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி ராம் அவர்கள் வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். அதன் முழு விபரமும் வருமாறு:-

இந்தக் கடற்கோள் அனர்த்தம் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மக்களின் புனர்வாழ்வு சம்பந்தமாக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மான மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக தங்களால் விளக்கிக் கூறமுடியுமா?

26.12.2004 எமது தமிழீழ தாயகத்தின் கரையோர பிரதேசங்களைத் தாக்கிய சுனாமி பேரலைகளின் தாக்கத்தால் எமது தமிழ் பேசும் மக்கள் மிகப் பெரும் பாதிப்பகளை அடைந்துள்ளார்கள். இந்த அனர்த்தம் நடந்த உடனேயே எமது தேசியத் தலைவர் அவர்கள் தளபதிகள், போராளிகள் அனைவரையும் மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார். அதற்கமைவாக நாம் அனைவரும் பணிகளை மேற்கொண்டோம். வடக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலான பகுதிகள் எமது இயக்கத்தின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதிகள். ஆகையால் அங்குள்ள எமது தளபதிகள், பொறுப்பாளர்கள், பணியணிகளை ஈடுபடுத்தி உடனடியாகப் பணிகளை ஆரம்பிக்க முடிந்தது. ஆனால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தவரை பாதிப்புற்ற பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளாக இருந்தது. அங்கு எமது அரசியல் பணிபுரியும் போராளிகள் மட்டுமே சென்று பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அதிலும் சுனாமி தாக்கிய அன்று அவர்கள் அங்கு இருக்கவில்லை. காரணம் விசேட அரசியல் வகுப்புக்களுக்கான அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் அழைப்புக்கிணங்க அவர்கள் வன்னி சென்றிருந்தனர். உடனடியாக அவர்கள் செய்தியறிந்து திரும்பி வந்தனர். அதற்கிடையில் பாதிப்புற்ற பகுதிகளில் நிலை கொண்டிருந்த சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினர் தமது ஆளணி வளங்களைப் பயன்படுத்தி கனரகவாகனங்களைப் பயன்படுத்தி மக்களை பாதுகாக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

உண்மையில் அந்த நேரத்தில் எமது மக்களுக்கான மனிதாபிமானப்பணிகளை மேற்கொண்டமைக்காக அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். அதேவேளை வடமராட்சிப் பகுதிகளில் கடலலையினால் பாதிப்புற்ற படையினரை எமது போராளிகளும் பாதுகாத்து உள்ளனர். உண்மையில் அந்த இக்கட்டான வேளையில் பரஸ்பரம் மனிதாபிமான உணர்வோடு அனைவரும் செயற்படவேண்டிய தேவையுள்ளது. மட்டு-அம்பாறை பகுதிகளில் எமது தளபதிகள் ரமணன், ஜனார்த்தனன், அரசியல்துறைப் பொறுப்பாளர்களான தயாமோகன், கௌசல்யன், குயிலின்பன், தமிழ் நிலவு ஆகியோர் உடனடியாகப் பணிகளை ஆரம்பித்து விட்டனர்.

ஐநூறுக்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டன. இடம் பெயர்ந்த மக்கள் வேகமாக எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் வந்து கொண்டிருந்தனர். சிறப்புத் தளபதி கேணல் பானு அவர்கள் உட்பட அனைவரும் வேகமாகச் செயற்பட்டு காயமடைந்த மக்களுக்கான மருத்துவச் சேவை, மக்களுக்கான சமைத்த உணவு வழங்கல், உடுபுடவைகள் வழங்கல் எனப் பல்வேறு பணிகளை முன்னெடுத்தோம். இதேவேளை வன்னியிலிருந்தும் பெண் போராளிகளும், ஆண் போராளிகளும் வந்து சேர்ந்தார்கள். அத்துடன் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களிலிருந்தும் பொது அமைப்புகளும், மக்களும், தொண்டர்களும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் நிவாரணப் பொருட்களோடு வந்திருந்தார்கள். இது எமது பணிகளுக்கு பெரும் பலமூட்டியது. அத்துடன் தெற்கு பகுதி, மலையக பகுதி மக்கள் நிவாரண பொருட்களோடு வந்திருந்தார்கள். அவர்களை இடைமறித்த அதிரடிப் படையினர் நிவாரண பொருட்களை தம்மிடம் ஒப்படைக்குமாறும், புலிகள் நிவாரணப் பொருட்களை பறித்து தமது முகாம்களுக்கு கொண்டு சென்று விடுவார்கள் என்றும் அம்மக்களுக்கு கூறியபோது அதனை அம்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதிரடிப்படையினரின் வற்புறுத்தல்களையும், மிரட்டலையும் மீறி அவர்கள் அந்த நிவாரணப் பொருட்களை கொண்டு வந்து எம்மிடம் தந்தார்கள்.

தந்துவிட்டுக் கூறினார்கள் கடந்த வருடம் தெற்கில், மலையகத்தில் மழை வெள்ளம் மண்சரிவு ஏற்பட்டபோது எந்த பேதமும் பாராது எமது காலடி தேடி நிவாரணப் பொருட்களோடு வந்தவர்கள்புலிகள். அவர்கள் ஒரு போதும் மக்களுக்கான நிவாரணப் பொருட்களை பறித்தெடுக்கின்ற வேலையைச் செய்ய மாட்டார்கள் என்கின்ற நம்பிக்கை எமக்கிருந்தது. எனக் கூறினர்கள். தற்பொழுது எமது போராளிகள் மருத்துவப் பணிகள், பெண்கள், குழந்தைகளுக்கான விசேட கவனிப்புகள், பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக் கழகம் வரைக்குமான மாணவர்களின் கல்வி மேம்பாட்டுப் பணியென பல்வேறுபட்ட பணிகளைச் செய்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புனர்நிர்மான செயற்பாடுகளின் போது படையினரால் இடையூறுகள் விளைவிக்கப்படுவதாகவும், புலிகளுக்கும், படையினருக்குமிடையே அடிக்கடி முரண்பாடுகள் நிகழ்வதாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது. படையினரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு காரணம் என்னவென்று நினைக்கின்றீர்கள்?

காலங்காலமாகவே எமது மக்களின் உரிமைகளை பறித்து போராட்டத்தையும் அழிக்கின்ற நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் சிங்களப் பேரினவாத அரசு செயற்படுத்தி வந்துள்ளது. அனைவருக்கும் தெரியும் இதே போலத்தான் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அலைத்தாக்குதலில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கான அவசர நிவாரணப் பணிகளை, புனர்வாழ்வு பணிகளை நாம் மேற்கொள்ளும் போது அதற்கு இடையூறு விளைவிப்பதன் மூலம் ஏற்கனவே உயிர்களையும், உடமைகளையும் இழந்து உளரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பாதிக்கப்படுகின்றனர். நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு இடையூறு செய்தல், கல்வி மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்கும் போது மாணவர்களை, ஆசிரியர்களை அச்சுறுத்தல் துப்பரவுப் பணி, மருத்துவப்பணி செய்யும் போராளிகளை ஆயுத பாணிகளாக இரவு பகல் நலன்புரி நிலையங்களில் பாதுகாப்பு என்ற போர்வையில் நின்று மக்களின் இயல்பான நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல் குறிப்பாகப் பெண்களுக்கான தனித்துவத்தை பாதிக்கும்வகையில் நடந்து கொள்ளுதல் என்பன திட்டமிட்ட இன ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் இன்னுமொரு வடிவம் அல்லது அதன் தொடர்ச்சி என்றுதான் கூற வேண்டும்.

ஏனெனில் 1983 இலிருந்து அம்பாறை மாவட்டத்தில் பல படுகொலைகளுக்குக் காரணமாக இதே அதிரடிப்படையினர் இன்னும் சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்கும் இடையூறாக உள்ளமையாலும் எமக்கு மனவேதனையளிக்கிறது.

களமுனைத் தளபதிகள் எல்லோரும் நின்று அர்ப்பணிப்புடன் மக்களுக்கு சேவையாற்றுகின்றீர்கள். படையினரின் இத்தகைய செயற்பாடுகள் உங்களின் பணிகளுக்கு இடையூறாக அமையுமிடத்து தங்களால் எத்தகைய மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது பற்றி கூற முடியுமா?

எமது பேராட்டம் மக்களுக்கானது. மக்கள் பாதிப்புற்ற இச் சம்பவம் எம் அனைவருக்கும் பெரும் மனக்கவலையை ஏற்படுத்தியுள்ளது. நீண்டகாலமாக இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் தமது சொத்து, சுகங்களை, உயிர்களை இழந்து துன்பப்பட்ட எம்மக்கள் இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ள இவ்வேளையில் எமது பணிகளுக்கு இராணுவத்தினர் மூலமாக இடையூறுகள் ஏற்படும்போதும் மக்களின் நலனுக்காக எமது போராளிகள் மிகவும் பொறுமை காத்து வேலைகளை முன்னெடுத்து வருகின்றனர். நாம் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நடாத்தியுள்ளோம்.

எமது அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் கௌசல்யன், குயிலின்பன் ஆகியோர் நெருக்கடி நிலமைகள் தோன்றும் போது அடிக்கடி படையதிகாரிகளைச் சந்தித்து சுமூகமான சூழலை உருவாக்க முயற்சிகள் செய்து வருகின்றனர். ஆனால் இந்த நெருக்கடி மிக்க காலத்தில் படைதரப்பினர் புரிந்துணர்வுடன் செயற்பட முயற்சிக்காமல் மீண்டும் மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்துவது எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளில் கூட பாதிப்புக்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

தொடர் 10ம் பக்கம்

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# சத்துருக்கொண்டானில் "சுவீஸ்" தமிழ் கிராமம்

(தனஞ்ஷயன்)

மட்டக்களப்பு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் ஒரு தொகுதியினரை சத்துருக் கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைகளில் மீள குடியமர்த்தும் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

நாளை குடியமர்த்தப்படவுள்ள அனைத்து வசதிகளும் கொண்ட தற்காலிக வீடமைப்பு கொட்டகைகளுக்கு "சுவிஸ் தமிழ் கிராமம்" எனும் பெயரில் இவ் இடம் அமையப் பெறவுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக மட்டு.அம்பாறை மேலதிகப் பணிப்பாளர் சீசர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கட்டிடங்களில் தங்கியுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்திய இலங்கை கரையோர பாதுகாப்புக்கு 742 கோடி ரூபா

(நமது நிருபர்)

இந்தியா தனது கரையோரப் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கு 742 கோடி ரூபா செலவிலான புதிய திட்டம் ஒன்றை அமுல்படுத்தவுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட கடல் ரோந்துப் பாதுகாப்பு மேலதிகமாகவும் அதேவேளை தற்போது அமுலில் உள்ள சில பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மேலதிகமாகவும் இந்தப்புதிய திட்டம் அமையும் எனக்கருதப்படுகிறது.

தீவிரவாதிகளின் ஊடுருவல் மற்றும் கடத்தல் சம்பவங்களை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்தப்புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். கடல் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கு கரையோரப் பொலிஸ் நிலையங்கள் அமைப்பு மற்றும் விசேட ரோந்து நடவடிக்கைகள் ஆகியவை உட்பட பல முக்கிய உபாயங்கள் அடங்கிய திட்டமாக இது இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகராக எம்.கே. நாராயணன் பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு துறைசார் நடவடிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

### முறைப்பாடு...

களை விற்பனை சம்பந்தமான முறைப்பாட்டினாலேயே இப்பிரச்சினை ஏற்பட்டதாகவும், பொலிஸ் அத்தியட்சகருக்குத் தெரிவித்த நிர்வாகத்தினர் இது விடயத்தில் விசாரணை வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாரணை மேற்கொள்ளப்படுமென உறுதி அளித்துள்ளதாக அகதி நிலைய பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

### கொடுப்பனவு...

செல்வி க.தங்கேஸ்வரி மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று புகையிரத போக்குவரத்து பிரதியமைச்சர் வசந்த அழகியவண்ண, செயலாளர் ஜெயவீர ஆகியோருடன் தொடர்பு கொண்டு நிலைமையினை எடுத்துக் கூறினர்.

அதற்கமைய இவர்களுக்கான 2500 கொடுப்பனவு கொடுப்பதாகவும், இவர்களது பிரச்சினை ஆராயப்பட்டு அதற்கான நல்ல முடிவு எடுப்பதாகவும் தெரிவித்ததுடன் எதிர்வரும் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை புகையிரத ஊழியர் சங்கத்திலிருந்து மூவரை கொழும்புக்கு வருகை தந்து கலந்துரையாடி இதற்கான தீர்வு காண்பதாகக் கூறினார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் புகையிரத ஊழியர்களுடன் நடாத்திய பேச்சு வார்த்தையை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இவ்வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக நேற்று மட்டக்களப்பு கொழும்பு வரையான புகையிரத சேவை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### திருக்கோவில்...

விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்று முற்பகல் இக்கூட்டம் கூட்டப்பட்டது.

கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் எதிர்பாராத வகையில் திடீரென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ச அங்கு நுழைந்தார். விடுதலைப்புலிகள் தரப்பில் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் இதற்கு ஆட்சேபணை தெரிவித்தார்.

அப்போது ஜே.வி.பி. உறுப்பினரை நோக்கி அழைப்பின்றி எவ்வாறு கூட்டத்திற்கு வருகை தந்தீர்கள் என்று விடுதலைப்புலிகள் கேள்வி எழுப்பினர். தான் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்ததாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார்.

இதனையடுத்து விடுதலைப்புலிகள் இந்த கூட்டத்திலிருந்து வெளியேறி விட்டனர். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன், குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏற்கனவே ஒரு தடவை நிவாரண உதவி என்ற போர்வையில் இப்பகுதிக்கு வந்து இனவாத அடிப்படையில் பேசியுள்ளார்.

வடக்கு கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்று பிரச்சாரங்களையும் மேற்கொண்டுள்ளார். எமது தேசியத் தலைவரின் படங்களை அகற்ற வேண்டும் என்று அரசாங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அது மட்டுமன்றி குறிப்பிட்ட குழுவில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அங்கத்துவம் வழங்கப்படவில்லை. அதனை மீறி அவர் நடந்து கொண்டதால் நாம் வெளியேறினோம் என்றார். இது தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலாளர் வி.கே.தவராஜாவிடம் கேட்ட போது,எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தான் அழைப்பு விடுக்கவில்லை என்பதை, குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரிடம்தான் வலியுறுத்திக் கூறிய போதிலும் அதனை மீறும் வகையில் அவர் நடந்து கொண்டதாகக் கூறினார்.

விடுதலைப்புலிகள் வெளியேறினாலும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் அதில் கலந்து கொண்டுள்ளார். பிரதேச செயலகத்திலுள்ள தமிழீழ தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் அகற்றப்பட வேண்டும். இல்லையேல் ஒருமாத காலத்திற்குள் இடமாற்றம் வழங்கப்படும் என ஜே.வி.பி.எம்.பி.பிரதேச செயலாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் என மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

### முஸ்லீம்...

வைத்துவிட்டு உயிர்களையும், உடமைகளையும் இழந்து நிர்க்கதியாகி நிற்கின்ற மக்களுக்கு உதவ வேண்டியது எம்மனைவரினதும் பொறுப்பாகும்.

எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இணைந்து செயற்பட ஆயத்தமாக இருக்கிறேன். எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். வாருங்கள் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

### காலம் காலமாக........

மட்டு-அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் இந்த கடல்கோள் அனர்த்தம் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள ஆனால் குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை பொறுத்தவரை சிறிலங்கா அரசில் போதியளவு அரசியல் பலம் இல்லாத காரணத்தினால் கிடைக்கப் பெறும் அரச நிவாரணம் மற்றும் ஏனைய உதவிகள் பற்றி மக்கள் மத்தியில் பெரும் ஐயம் நிலவுகின்றது. இது முறையாக கிடைக்க விடுதலைப் புலிகளால் எத்தகைய முய்ற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்பது பற்றி கூற முடியுமா?

அம்பாறை மாவட்டத்தில் மூன்றாவது சிறுபான்மை இனமாகவே இன்று தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இதனால் அரசியல் ரீதியான பலம் மற்றைய மாவட்டங்களைப் போல் இல்லை என்பது உண்மை தான். அரசஅதிபர் தொடக்கம் அரசஅதிகாரிகள் பலரும் பெரும்பான்மை இனத்தைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு.பத்மநாதன் அவர்களும் சுனாமியினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபடியே மக்களுக்கும் சேவையாற்றி வருகின்றார். இந்நிலையில் சுனாமி அனர்த்தத்தின் பின்பு மேலதிக அரச அதிபராக ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளது நல்ல விடயம்தான். ஆனால் அவரின் பணிகள் மிகவும் வேகமாகவும் சிறப்பாகவும் அமைய வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

எமது மாணவர்களின் கல்வி வளங்கள் பாதிக்கப்பட்டு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் இந்த கடல்கோள் அனர்த்தம் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர்களது கல்வி மேம்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுக்கத் தங்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பற்றியும் தேவைகள் பற்றியும் கூற முடியுமா?

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைப்பொறுத்தவரை கடந்த காலங்களில் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பல கிராமங்கள் முற்றாகவே கல்வியில் பாதிப்புக்களை சந்தித்துள்ளன. அதே வேளை இந்த சுனாமி அலைத்தாக்கங்களினால் பல பாடசாலை கட்டடங்கள், தளபாடங்கள் முற்றாக அழிந்து போயுள்ளன. பாடசாலை பல மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். பாடசாலைகளே பல இடங்களில் மக்களின் நலன்புரி நிலையங்களாக உள்ள காரணத்தால் பாடசாலைகளை உரிய காலத்தில் ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்புக்குள்ளாகிறது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் வேறு உயர்கல்வி மாணவர்கள் தமது கல்வியை தொடர முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் கூட பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் கல்வியை மேம்படுத்த நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பேனைகள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கான இலவச வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நலன்புரிநிலையங்களில் முன்பள்ளிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவித்திட்டம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ளது. அதுவும் ஒரு நல்ல முயற்சி . இவ்வாறாக எதிர்காலங்களில் எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் அனைவரும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

எமது மண்ணில் அந்நியப் படையினர் மனிதாபிமான ரீதியில் உதவுவதற்காக வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இருந்தாலும் மக்கள் மத்தியில் இவர்கள் மீது ஒரு விதமாக சந்தேகம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது. இது தொடர்பாக தங்களின் கருத்தை அறிய முடியுமா?

மட்டு-அம்பாறை மாவட்டங்களில் வெளிநாட்டு படையினர் பல பணிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அவர்கள் மனிதாபிமானப் பணிகள் புரிவதற்காகவே மாக அறிய முடிதாம் வந்துள்ளதாகவும் அப்பணிகள் முடிந்ததும் தமது நாடுகளுக்கு செல்வதாக கூறியதை ஊடகங்கள் மூலமாக அறிய முடிகிறது. நாமும் அவர்கள் கூறியது போலவே செயற்பாடுவார்கள் என நினைக்கின்றோம் என்றார்.

TOPAZ LANKA MANPOWER RECRUITMENT
டொப்ஸ் லங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்
Govt. Approved Manpower Recruiting Service, Air Ticketing, Travalagent
அமெரிக்க நிறுவனத்தால் பராமரிக்கப்படும் சவூதியரேபியா கட்டார் ஆகிய நாடுகளுக்கு வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்கள் மற்றும் மேசன் ஓடாவி பிளம்பர் சகல விதமான கட்டட பணியாளர்கள் தேவை. 10 நாள் தொடக்கம் 15 நாட்களில் பயணம் நேர்முகப் பரீட்சை மேற்படி விலாசத்தில் நடைபெறும். வீட்டுப் பணிப் பெண்களுக்கு ஒரு வாரத்தில் பயணம். 18 வயது முதல் 40 வயது வரையான விரும்பியவர்கள் கடவுச்சீட்டு அடையாள அட்டையுடன் நேரில் வரவும்.
குறிப்பு : கடவுச்சீட்டு அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு இவை பெற்றுத்தரப்படும்
Tel: 065-2241154
Fax: 065-2241154
E-mail: topzcom@sltnet.lk
Labour Licence அரச அனுமதி இல. 1303
No. 15, Main Street,
Chenkalady

இப்பத்திரிகை நிதி பதிப்பகத்தால் 01.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது